







# விழிப்புணர்வு

செப்டம்பர் 03, 2005 அன்று சிங்கப்பூர் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில்
திருமண மண்டபத்தில் நடைபெற்ற இலக்கியவிழாவில் இடம் பெற்ற படைப்புகளின் முழுத் தொகுப்பு





# இலக்கியவிழா (03-09-05)

நிகழ்ச்சி இறைவணக்கத்துடன் துவங்கியது. திருஞானசம்பந்த சுவாமிகள் மதுரையில் தங்கி இருந்தபோது தனது தந்தை முதலியோரைச் சந்தித்து சீர்காழித் தோணியப்பரை வினவுமுகமாகப் பாடியருளிய 3-ம் திருமுறைப்பதிகத்தை இறைவணக்கமாகப் பாடியவர் **செல்வன் விக்னேஷ் அண்ணாமலை.**

மண்ணில்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல்ல கதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல அஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளாலோடும் பெருந்தகை யிருந்ததே.

போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள அவளொடும் பெருந்தகை யிருந்ததே.

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோடு இருந்த எம்பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம்பந்தன் செந்தமிழ்
விரும்புவார் அவர்கள்போய் விண்ணுலகு ஆள்வாரே.

தொடர்ந்து புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் உணர்த்தும் தமிழின் சிறப்பினை **திருமதி கஸ்தூரி ஐங்கரன்** அவர்கள் பாடினார்கள்.

தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.
தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்.!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்!- இன்பத்

தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!

----------o----------

# முகவுரை

தமிழ் இலக்கியங்களிலே சொல்லப்படாதவை இல்லை என்று சொல்லும் அளவிற்கு எழுதிக் குவிக்கப்பட்ட நூல்களின் மேல் எல்லோரது பார்வையும் படவேண்டும், தமிழுக்கு விழா எடுத்து அந்த ஈடுபாட்டை ஊக்குவிக்க வேண்டும் என்கிற ஆசை நிறைவேறிய நாள்தான் இந்த இலக்கிய விழா நடந்தேறிய 2005 செப்டம்பர் 3-ம் நாள். முத்தமிழில் ஒன்றான நாடகத் தமிழை ஜூன் மாதக் கலை விழாவில் நடத்தி முடித்த பெருமிதத்துடனும், இசைத் தமிழை அக்டோபர் மாத தீபாவளிக் கலைஇரவில் நடத்த இருக்கும் சிந்தனையுடனும் இயற்றமிழுக்கு விழா எடுக்கப்பட்டது. இந்த எண்ணம் முளைவிட்ட நாள் முதல் பார்வையாளர்களையும் மேடையேற்ற வேண்டும் என்பதில் முனைப்பாக செயல்பட்டோம். இதற்கு முழு ஒத்துழைப்பை நல்கியவர் நண்பர் திரு. ராம. வைரவன் அவர்கள். படைப்பவர்கள் மட்டுமின்றி படிப்பவர்களும் மேடையேறிய சம்பவம் அன்று நிறைவேறியது. படித்தவர்களில் சிலருக்குப் படைப்பவர்களாக வேண்டும் என்கிற ஆர்வமும் ஏற்பட்டது.

கவிதைப் பூங்காவாக மலர்ந்த அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து, கவியரங்கமும், பட்டிமன்றமும் நடைபெற்றன. நமது சங்கத்தில் இலக்கியத்திற்காக இத்தகைய விழாக்கள் நடைபெற்றதில்லை. முதல் முறையாக நடந்தாலும் முதல் தரமாக்கினார்கள் பங்கு பெற்ற கவிஞர்களும், பேச்சாளர்களும். கூட்டத்தினரைத் தங்கள் கட்டுப்பாட்டில் அசையவிடாமல் வைத்திருந்தது அவர்களது திறமையைப் பறைசாற்றியது. அப்படிப்பட்ட அற்புதமான படைப்புக்கள் மற்றும் ஏற்கனவே எழுதப்பட்ட புகழ் பெற்ற கவிஞர்களின் படைப்புக்கள் போன்றவை அன்று ஒரு நாள் மட்டும் கேட்டதோடு நின்றுவிடக் கூடாது என்ற நோக்கத்துடன் தொகுத்து வெளியிட முடிவு செய்து, அன்று பங்கு பெற்றவர்களிடமிருந்து படைப்புக்களைப் பெறுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டோம். கவிதைப் பூங்காவிலே இடம்பெற்ற ஒரு சில கவிதைகளைப் பெறமுடியாமல் போய்விட்டது. இடையிடையே **கவியரசு கண்ணதாசன்** அவர்கள் எழுதிய பாடல்கள் சில எவ்வாறு உருவாயின என்பதனை அவரது மூத்த மகன் திரு கண்மணி சுப்பு

அவர்கள் சிங்கப்பூரில் கண்ணதாசன் விழாவில் கூறக் கேட்டதையும் சேர்த்திருக்கிறோம். கண்டிப்பாக ரசிக்கத்தக்க வகையில் அது இருக்கும்.
இந்தத் தொகுப்பு வெளிவர உதவியாக இருந்த நகரத்தார் சங்கத்திற்கும், அணிந்துரை வழங்கிய பேராசிரியர் முனைவர் சுப. திண்ணப்பன் அவர்களுக்கும், நிகழ்ச்சியில் பங்குபெற்றுச் சிறப்பித்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நன்றி!**, **வணக்கம்!**
**சிங்கப்பூர்,**
**சித. அருணாசலம்.** 20-12-05.

## அணிந்துரை

சிங்கப்பூர் நகரத்தார் சங்கத்தினர் சென்ற செப்டம்பர் திங்கள் 3-ம் நாள் இலக்கிய விழா நிகழ்ச்சியை ஸ்ரீதெண்டாயுதபாணி திருக்கோயில் மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடத்தினர்.

இலக்கியத்திற்கு வடிவங்கள் இரண்டு. ஒன்று கவிதை, மற்றொன்று உரைநடை. எழுத்து நடனமாடினால் கவிதை. நடந்து வந்தால் உரைநடை. இவ்விரண்டும் இலக்கிய விழாவில் இடம்பெறும் வகையில் கவியரங்கமும், பட்டிமன்றமும் அமைத்தது பாராட்டிற்குரியது. கவியரங்கத்திற்கு முன் கவிதைப்பூங்கா என்னும் ஒரு நிகழ்ச்சி பார்வையாளர்கள் தாங்கள் படித்த, வடித்த, சுவைத்த, பாராட்டிய, கவிதைகளை வாசிக்க வாய்ப்பளித்தது. இந்தக் கவிதைப் பூங்கா, காணும் பூங்காவாகவும், காதால் கேட்டு மகிழும் பூங்காவாகவும் இருந்தது. கவிதைக்கும், மலருக்கும் இடையே காணும் ஒற்றுமை, வேற்றுமை யாவை?

**மலர்களின் இதழ்களே கவிதையின் சொற்கள்.**
**மலரின் மணமே கவிதையின் உணர்ச்சி.**
**மலரின் வண்ணமே கவிதையின் கற்பனை.**
**மலரின் வடிவமே கவிதையின் யாப்பமைதி.**
**மலரின் நறுந்தாதே கவிதையின் கருத்து.**

மலரால் மாலை கட்டுவது போல, கவிதையால் நூலை ஆக்கலாம். எனினும் மலர்கள் வாடும், கவிதையோ வாடாது. இத்தகைய மலர்களைக் கொண்ட பூங்காவில் 27 பேர், சிறுவர் முதல் முதியோர் வரை, 27 விண்மீன்களைப் போல் படித்தும் நடித்தும் காட்டினர். கவிதைகளைப் படிப்பதே கவிதை படைப்பதற்கு அடிப்படை என்பதை இந்நிகழ்ச்சி நன்கு எடுத்துக் காட்டியது.

கவியரங்கம் என் தலைமையில், விழிப்புணர்வு வேண்டும் என்னும் பொதுத்தலைப்பினை ஒட்டிக் கவிஞர்கள், லெ. சக்திகுமார், அழகு சுந்தரம்,
சா. மெய்யப்பன், க. வெங்கடாசலம், சித. அருணாசலம், ராம. வைரவன் ஆகிய அறுவர் முறையே குலத்தில், பொருளாதாரத்தில், சமுதாயத்தில், குழந்தைவளர்ப்பில், பருவத்தில், உன்னில் ஆகியவற்றில் விழிப்புணர்வு வேண்டும் என்பதை விளக்கிக் கவிதைகள் படைக்க நடைபெற்றது. கவிஞர்கள் மிகச்சிறப்பாகக் கவிதைகள் படைத்தனர். இந்நிகழ்ச்சியில் இடம்பெற்ற கவிதைகள் காற்றோடு காற்றாகப் போய்விடாமல் இருக்க ஒலிவட்டுகளாகக் கொணர்ந்தனர், நகரத்தார் சங்கத்தினர். இப்போது அக்கவிதைகளைத் தொகுத்து ஒரு நூலாகவும் வெளியிட்டுள்ளார்கள். மேலும் இடையிடையே பாடல் பிறந்த கதையாகக் கண்ணதாசன் படைப்புக்கள் சில பிறந்த கதைச்சூழல்களை, அவர் மகன் கண்மணி சுப்பு வாயிலாகக் கேட்டவற்றையும் தொகுத்துள்ளனர். இந்நூல் கவிதையைப் படிப்பவர்க்கும், சுவைப்பவர்க்கும், பாராட்டுபவர்க்கும், பகுத்தாய்பவர்க்கும், படைப்பவர்க்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

மேலும் நகரத்தார் பண்பாடுகளை அறியவும் மேம்பாடு அடையவும் இந்நூல் உறுதுணையாக உதவும். இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களை அடையாளம் காட்டவும் அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் ஊட்டவும் இந்நூல் வெளியீட்டு முயற்சியை மேற்கொண்டவர்களின் பணியைப் பாராட்டுகிறேன். இதுபோன்ற இலக்கியப்பணியை இனிவரும் செயற்குழுவினரும் தொடரவேண்டும் எனபது என் விருப்பமும் வேண்டுகோளுமாகும். இந்நூலை அன்பர்கள் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்கள் என்று நம்புகிறேன். நன்றி!! வணக்கம்.

அன்பன்,
சிங்கப்பூர்,
சுப. திண்ணப்பன். 27-12-05.

----------o----------

<u>தமிழ்த் தாய் வாழ்த்து!</u>

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்,
சீராரும் வதனமெனத் திகழ் பரதகண்டமிதில்
தெக்கணமும், அதிற்சிறந்த திராவிட நல்திருநாடும்,
தக்கசிறு பிறைநுதலும், தரித்தநறுந் திலகமுமே

அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
உன்சீரிளமைத் திறம்வியந்து, செயல்மறந்து
வாழ்த்துதுமே, வாழ்த்துதுமே, வாழ்த்துதுமே!

- மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை.

----------o----------

**திரு ராம. வைரவன் அவர்கள்** கவிதைப் பூங்கா நிகழ்ச்சியைத் துவக்கி வைத்து, எழுதி வாசித்த முதல் கவிதை

## இன்றைய வாழ்க்கை

வாழ்க்கை மிக வேகமாக
ஆகிப் போச்சுது.
வளர்ச்சிக்கான போட்டி இங்கே
கூடிப் போச்சுது.

எங்கும் வேகம் எதிலும் வேகம்
ஆகிப் போச்சுது.
பொறுமை, பொறுமை, பொறுமையெல்லாம்
போயே போச்சுது.

மனித குலம் மகத்தான
வளர்ச்சி காணுது.
மனசுக்குள்ளே மனஉளைச்சல்
விளைச்சல் காணுது.

# சிங்கப்பூர் ஸ்ரீ தெண்டாயுதபாணி கவசம்

உலகமே போற்றுகின்ற உயர்வான பெருந்தெய்வம்
நலம்யாவும் தந்தருளும் நற்சிங்கப் பூரினிலே,
கோலா கலமாகக் கோயில்கொண்ட கோமகனாம்
பாலதண்டா யுதபாணி பாதமே போற்றிடுவோம்.

சிங்கப்பூர் தன்னில் சிறப்பாய் விளங்கும்
எங்களின் தெய்வமே தெண்டா யுதபாணி
மங்கலம் யாவும் மகிழ்ந்தே அளிப்பார்.
செங்கமலம் போல் சிறப்பெலாம் அருள்வார்.

இந்திய நாட்டின் எழிலை வளர்க்கும்
சிந்தனை மிக்க செட்டி நாட்டார்கள்
வந்தநாள் முதலாய் வடிவேல் அழகனை
சொந்தம் கொண்டாடி சுடராய் வளர்ந்தார்.

டேங்ரோடு தன்னில் அருளின் டேங்கினை
மேலாம் கோயிலில் அழகுற அமைத்தார்.
ஒவ்வொரு நாளும் திருவிழாக் கோலம்!
திவ்விய தரிசனம் திருமகள் வாசம்!

வல்லவ னுக்குப் புல்லும் ஆயுதமாம்.
தெண்டாயுத பாணிக்குத் தண்டே ஆயுதமாம்.
செங்கோல் தன்னைச் செங்கரம் கொண்டார்.
பொங்கும் மங்கலம் பூரிக்கச் செய்தார்.
முருகன் திருவடி சரணம் என்றால்
அருகில் வந்தே அரசாய் வளர்ப்பார்!
தாய்த்திரு நாட்டில் மனைவி மக்களைக்
கொப்பாய் விடுத்துக் கொண்டுவிற்க வந்த

நாட்டுக் கோட்டை நகரத்தார் போல
சேட்டாம் முருகனும் தனிஆளாய் வந்தார்.
மக்களின் மகிழ்வே தந்தைக்கு இன்பம்
எக்காலம் மனைவியர் இதயத்தில் தஞ்சம்

தைப்பூச நாளில் தங்கரதம் ஏறி,
வையகம் போற்ற வலம்வரும் ஈசன்
லட்சக் கணக்கில் தேங்காய் உடையும்
லட்சியம் நிறைவேறிய மக்கள் மகிழ்வர்.

இந்து மதத்தவர் போலவே அனைவரும்
சொந்தம் கொண்டாடிச் துதிப்பார் முருகனை.
காவடி ஏந்திப் பூக்குழி நடந்து
பாவடி போற்றிப் பணிவார் அனைவரும்.
அலகுகள் குத்தி ஆடியும் வருவார்!
மேலெல்லாம் வேல்குத்தி விரைவாய் வருவார்!
சிந்தும் இரத்தம் திருநீறு தருவார்!
வந்த தடம்இன்றி வாகாய் மறையும்.

என்ன அதிசயம் என்றே காணக்
கண்கள் கோடி கண்டிப்பாய் வேண்டும்
வேல்வேல் என்றே விருப்புடன் பாடி
சேவல் கொடியினைச் சிரசினில் ஏந்தி
மேலாம் முருகனை வழிபடு வோர்க்கு
மேதினி போற்றும் மேன்மைகள் கிடைக்கும்.
பதினா றான பேறுகள் அனைத்தும்
நதிபோல் வந்து நலமெலாம் அளிக்கும்.

பன்னிரு கையான் பதமலர் போற்றி!
எண்ணில் அடங்கா இனியவா போற்றி!
கண்ணின் மணியே கந்தா போற்றி!
வண்ண மயிலேறும் வடிவேல் போற்றி!
மணமிகு தெய்வானை மணாளா போற்றி!
வனமகள் வள்ளியின் வாழ்வே போற்றி!
மீனாட்சி பெற்ற தேனப்பா போற்றி!
தேனாட்சி புரியும் தேனப்பா போற்றி!
எங்கள் வாழ்வின் ஊற்றே போற்றி!
மங்கலம் தந்தருள் மயிலோன் போற்றி!
போற்றி போற்றி திருவடி போற்றியே!

**எழுதியவர் கவிஞர் வ. தேனப்பன்**

**வாசித்தவர்கள் – செல்வி வள்ளி & செல்வி கோதை நிவேதா**

## உயிர் எழுத்தில் முருகன்

**அ**ழகு கொழிக்கும் முருகனாம்
**ஆ**க்கம் பொழியும் செம்மலாம்
**இ**சையை நல்கும் கவிஞனாம்
**ஈ**கை உள்ள நம்மவரை
**உ**யர்த்தி வைக்கும் ஏணி அவன்.
**ஊ**ரார் போற்றும் உத்தமனாம்
**எ**ன்றும் அவன் புகழ் பாடினால்
**ஏ**ற்றம் உண்டு நம் வாழ்வில்.

ஐயம் இன்றி நான் சொல்வேன்
**ஒ**ன்றுகூடி வாருங்கள்
**ஓ**டி அவனைப் பணிந்திட்டால்
**ஔ**டதம் நமக்கு அவனாவான்.

**எழுதி வாசித்தவர் – திருமதி சாத்தப்பன் லெட்சுமி**

## நகரத்தார் பெருமை

கல் தோன்றிப்பின் மண்தோன்றாக் காலத்தே
புல்லாகிப் பூண்டாகிப் புழுவாகி விலங்காகி
வல்லாராய் பகுத்தறிவும் மானிடராய் உருப்பெற்று
கல்விதனைக் கற்றுக் கசடறத் தெளிந்து

பல்லுயிர் ஓம்பி நற் பண்பினை ஊக்கியும்
சொல்லினில் இனிமையும் செயலினில ஆற்றலும்
தொல்லுலகில் செல்வம் கடல்கடந்து ஈட்டியும்
கல்லையும் மேட்டையும் கடிநிலம் திருத்தியும்

முல்லையும் மல்லியும் முகிழ்த்து மணம்தர
இல்லை இதை ஒத்ததென எழில்மனை கட்டியும்
பல்லுயிர் உண்ண ஊருணி வெட்டியும்
எல்லையில் கருணை இறைதமைப் போற்றிட

கல்லினில் சிற்பக் கவிதைகள் எழுப்பியும்
ஒல்லும் வகை சிவ முருகனை நாட்டியும்
அல்லும் பகலவன் அருட்புகழ் பாடியும்
பல்கலைக் கல்வியொடு பல்தொழில் வளர்த்தும்

நல்லன எண்ணி நனி வளம் பெருக்கி
இல்லமே கோவிலாய் இல்லறம் நடாத்தி
இல்லை என்போர்க்கு இரங்கியும் ஈந்தும்
சொல்லையும் மொழியையும் தாய்க்கிணை வைத்து

சொல்வன செய்தும் செய்வதில் செம்மையும்
பல்திறத் திண்மையை பாரெலாம் ஏற்ப
நல்லவர் வல்லவர் நகரத்தார் எனில்
அல்லென மறுப்போர் அரிது இப்புவியில்
வெல்க நகரத்தார் வீறுகொண்டெழுந்தே!

**எழுதியவர் – திரு. திருநாவுக்கரசு**
**வாசித்தவர் – திரு. ராஜா**

தமிழ் என் மூச்சு.
ஆனால்
அதைப் பிறர் மேல் விட மாட்டேன்.
- கவிஞர் ஞானக்கூத்தன்

## தமிழ்த் தேசிய கீதம்

எங்கள் அன்னை எங்கள்நாடு எங்கள்மக்கள் வாழியவே!
இன்பமுத் தமிழ்வளர்த்த தங்கமக்கள் வாழ்கவே!
சிங்கமென் றிலங்கைவென்ற தென்னகத்தார் வாழ்கவே!
செம்மை அன்பு பண்புமிக்க செல்வமக்கள் வாழ்கவே!
காடுவெட்டி நாடுகண்ட கைகளோங்கி வாழ்கவே!
கள்ளமற்ற உள்ளம்பெற்ற கன்னிமக்கள் வாழ்கவே!

ஏடுநூறு கவிதைகோடி எழுதிவைத்த புலவரும்
இளையமாதர் கலையுளாரும் இனிதுவாழ்க! வாழ்கவே!
அலைகடந்து மலைகடந்து அவதிகொண்ட தமிழினம்
நிலையிழந்து வழிமறந்து நின்றுவிட்ட தனியினம்
தலைநிமிர்ந்து தனையுணர்ந்து தாயிடத்து வருகவே
தமிழராளும் தமிழர் நாட்டில் தகைமையோடு வாழ்கவே!

உலகிலுள்ள மனிதவர்க்கம் பெறுவதான புகழெலாம்
உயர்வுகொண்ட தமிழர் எங்கள் தலைமுறைக்குள்
பெறுகவே!
அலையிருக்கும், மலையிருக்கும், காற்றிருக்கும் நாள்வரை
அறிவிருக்கும் தமிழர்நாடு ஒளிபடைத்து வாழ்கவே!
பொன்னி, வைகை பொருநை வாழ்க! பூமியுள்ள நாள்வரை
மன்னராண்ட மதுரை தஞ்சை காஞ்சியோடு உறந்தையும்
மறவர் நாடும் உலகமுற்றும் வாழ்கவாழ்க வாழ்கவே!

**எழுதியவர் - கவிஞர் கண்ணதாசன்**
**வாசித்தவர் - செல்வன் சக்தி லெட்சுமணன்**

## அப்பர் பெருமான் பாடலை எளிமைப் படுத்தியது

மனம் என்னும் நிலத்தில்
உண்மை என்னும் உழவைச் செய்து
அன்பு என்னும் விதையை விதைத்து
பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சி
பொய்மை என்னும் களையை நீக்கி

தன்னையே உணரும் உரத்தை இட்டு
இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பாவித்து
தோல்வியால் துவளாமல்
வெற்றியில் ஆணவம் கொள்ளாமல்
பயிர் செய்து வந்தால்
உள்ளத்தில் சிவசக்தி என்னும்
பயிர் வளர்ந்திருக்கும்.

**எழுதி வாசித்தவர் – திரு பழ. சேதுராமன்**

## சும்மா இருக்கும் நல்லவனே!

சும்மா இருக்கும்
நல்லவனே!
உன்னால் நன்மை
உலகுக்கு இல்லையடா!

தவறுகள் நடந்தால்
தட்டிக் கேட்பதில்
தயக்கம் ஏனடா?

உணர்ச்சிகள் இன்றி
உயிரோடிருப்பது
உலகுக்குப் பாரமடா

சமூகம் என்பது
உன்னையும் சேர்த்தே
உணர்ந்துகொள்
மானுடா!

சரி சரி என்றே
சகித்துப் போயிட்டா
தவறுகள் பெருகுமடா

நமக்கேன் வம்பென்று

நழுவி போவது
நற்செயல் இல்லையடா!

நீயும் ஒருநாள்
நிம்மதி இழப்பாய்
நினைவில் கொள்ளடா!

தயக்கம் போக்கி
தட்டிக் கேட்டால்
தவறுகள் குறையுமடா

ஒவ்வொரு மனிதனும்
இதனை உணர்ந்தால்
நாடே உயருமடா!!

**எழுதியவர் – திரு ராம. வைரவன்**
**வாசித்தவர் – செல்வன் சுப. நவீன்குமார்**

## பெண்குழந்தை தாலாட்டு

சோலை மலரே! சுவர்ணத்தின் வார்ப்படமே!
காலை இளஞ்சூரியனைக் காட்டும் பளிங்குருவே!

வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேச வந்த பெண்ணழகே!

நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும், இப்புவிக்குத்
தாயென்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே!

அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச்
சின்ன உடலாகச் சித்தரித்த மெல்லியளே!

மின்னல் ஒளியே! விலை மதியா ரத்தினமே!
கன்னல் பிழிந்து கலந்த கனிச்சாறே!

மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்க வரும் கற்பூரப் பெட்டகமே!

வெண்முகத்தில் நீலம் விளையாடிக் கொண்டிருக்கும்
கண்கள் உறங்கு! கனியே உறங்கிடுவாய்!

**எழுதியவர் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்**
**வாசித்தவர் - செல்வி மு. திவ்யா**

## ஆசை

ஆடையின்றி பிறக்கும் நாம்
ஆசையின்றிப் பிறப்பதில்லை.
ஆசை இன்றி கனவு இல்லை.
கனவு இன்றி முயற்சி இல்லை.
முயற்சி இன்றி உழைப்பு இல்லை.
உழைப்பு இன்றி உலகம் இல்லை.
ஆசை வாழ்க்கைப் படகின் உந்துசக்தி.
எந்த சக்திக்கும் எல்லை உண்டு.
ஆசைக்கும் எல்லை உண்டு.
ஆசை ஆற்றில் அமுதம் பிறக்கும். -
அளவாயிருந்தால்,
பேராசை வெள்ளத்தில் ஆலகால விஷம் சுரக்கும்.
அதிகமானால்
ஆசையை அறுக்க வேண்டாம். ஆள வேண்டும்.

**எழுதி வாசித்தவர் - திரு முத்துப் பழனியப்பன்**

## இன்றைய தினங்களில்

கண்ணிமைக்கும் நேரத்தில் கணக்குப்போடும்
கணக்கற்ற செய்திகளைத் தனக்குள் தேடும்.
பண்ணமைக்க வேண்டுமெனில் பாட்டும் பாடும்
பதுமைகளுக்கு உயிர்கொடுத்து ஓட்டும் ஓடும்
விண்வெளியில் கப்பல்களை அழைத்துச் செல்லும்
விதவிதமாய் வார்த்தைகளை அமைத்துச் சொல்லும்
எண்ணத்தில் எல்லைகளைத் தொட்டுக் காட்டும்
எதிரிகளை வானத்தில் சுட்டிக் காட்டும்

ஆலைகளில் உதிரிகளைப் பூட்டிக் காட்டும்

அங்காடிக் கணக்குகளைக் கூட்டிக் காட்டும்
பாலர்களின் படிப்புக்கு உதவி செய்யும்
படித்தவர்கள் மேற்படிப்புக்கு எதுவும்செய்யும்
வேலைகளை அயர்வின்றி விரைவில் செய்யும்
வேண்டும்போது அழைப்பின்றி வரவும் செய்யும்
கூலியெதுவும் கேட்காது குறை சொல்லாது
குளிர்காலம் வெயிற்காலம் எனநில்லாது

என்வீட்டில், அவர்வீட்டில் மட்டும் இன்றி
எங்கெங்கும் வந்துவிட்ட கட்டம் இன்று
நம்கையில் புதிதாக வைத்துப் பார்ப்போம்
நாள்கிழமை ராகுகாலம் எதுவும் வேண்டாம்
தன்பாட்டுக்கு இங்கிருந்தே உலகை மாற்றும்
தனிமனிதன் உயிர்வாழ்வின் தரத்தை ஏற்றும்
கம்ப்யூட்டர் அற்புதங்கள்அனைத்தும் சொல்ல
கம்ப்யூட்டர் நினைவாற்றல் எனக்கும் இல்லை

**எழுதியவர் – திரு. சுஜாதா**
**வாசித்தவர் – செல்வன் செ. சேதுராமன்**

## வருந்தாதே மனமே!

அன்னம் போல் நடை நடந்து,
என்னைக் காந்தம் போல் ஈர்த்தவளே!
பின்னல் சடை கண்டு
நான் படிப்பில் பின் தங்கி விட்டதை,
அடிக்கொரு முறை ஏசிக் காண்பிக்கும்
குடும்பத்தார் மத்தியில்
வாளாயிருந்தேனே! நான் வாழாதிருந்தேனே!
வாளாயிருந்தேனே! நான் வாழாதிருந்தேனே!
சூடு ஒரு ருசி, சிகப்பு ஒரு அழகு என்பர் மக்கள்,
அக்கூற்றை மெய்ப்பிக்கவே தோன்றினாள் எழில் மங்கை.
முத்துப் போல் பல்லழகி அவள்பட்டுப் போல மெய்யுடையாள்.
இவள் கண்களிலிருந்து தான் கதிரவன் உதயாமாகிறானோ? –
அல்லது இவள் அழகு பிம்பத்தைக் கண்ட பின்பு, அம்புலி
தன் வடிவைப் பெற்றாளோ?
வானவில்லின் நிறங்களைத் தன்னுள் ஐக்கியப்படுத்திய
அத்தையல்,
தினமும் தோன்றி மறையும் பனிபோலத் தோன்றியவள்,
இன்று மட்டும் ஏன் மறைந்தாள்?
தன் அழகு முகத்தைக் காட்டி, செவ்வாய் மலர்ந்து பேசி,
வசீகரப் பார்வை வீச இன்று வரமாட்டாளோ அந்த எழில் நங்கை?

**எழுதியவர் – திருமதி உமா வள்ளியப்பன்**
**வாசித்தவர் – செல்வி நாச்சம்மை வள்ளியப்பன்**

## சுமைகள்

பிறக்கும் முன்னரே மனிதனை பத்துத் திங்கள் தாய் சுமக்கின்றாள்.
இறந்த பின்னரும் அவனை இறுதிவரை நால்வர் சுமக்கின்றனர்.

சுமையாக – ஐவருக்கேனும் சுமையாகி இடைப்பட்ட தன் வாழ்நாளில்
சுமைகள் அற்று வாளாயிருப்பவன் மனிதனாய்ப் பிறந்ததும் ஏனோ?

ஐயிரண்டு திங்கள் தொடர்ச்சியாய் தாய்மார்கள் சுமப்பது பாசச்சுமை.
ஐயமில்லை – இது தன்னலன் கருதா தன்னிகரற்ற தியாகச்சுமை.

கரம்பிடித்த மனைவியுடன் நல்லறம் விளங்க இல்லறம் நடத்தி
குடும்பம் திறம்பட விளங்க தந்தைமார் சுமப்பது அன்புச்சுமை.

ஆளான பிள்ளைகளின் வாழ்க்கை ஆதாரமாய் விளங்கச்செய்ய
அணியாரமாய் துணை அமைப்பது பெற்றோரின் தலையாய சுமை

கட்டிக் கொடுத்த மகள் தாயாகும் வேளையில் – ஈடில்லா கனிவுடன்
கண்ணின் இமை போல் போற்றுவது ஆயாக்களின் இதமான சுமை.

பேரன் பேத்தியர் அசைவில் வலிகள் மறந்து வயதையும் தொலைத்து
முதுமையிலும் விளையாடி ஓட ஐயாக்கள் சுமப்பதும் இனிதான சுமையே!

குடும்பம் திறம்பட சுமந்து சுமந்து சற்றே அயரும் பெற்றோருக்கு
காலூன்றிய பின் தோள்கொடுக்க பிள்ளைகள் சுமப்பது சுகமானசுமை.

சுமைகள் இவை யாவையும் மானிட வாழ்வின் அங்கங்கள்
சுமைகள் அற்று வாளாயிருப்பவன் மனிதனாய்ப் பிறந்ததும் ஏனோ?

**எழுதி வாசித்தவர் – திரு இளை. சரவணன்**

**பாடல் பிறந்த கதை – 1**

நடிகர் திலகம் அவர்களும், கவியரசர் அவர்களும் திமுக விலே இருந்த போது, கட்சியின் கொள்கைக்கு எதிராக சிவாஜிகணேசன் அவர்கள் யாருக்கும் தெரியாமல் திருப்பதி சென்று சாமி கும்பிட்டதை கட்சியின் பத்திரிகையிலே எழுதிவிட்டார், கவியரசர். அதனால் இருவருக்கும்

## மன்னிக்க வேண்டும் மாண்புமிகு பகவானே!

சின்ன சின்ன பாவங்கள் எத்தனை செய்கிறோம்! யோசித்துப் பார்த்ததில் எல்லாவற்றுக்கும் ஒட்டு மொத்தமாக கடவுளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் என்ன என்று தோன்றியது. இது உங்களுக்கும் சேர்த்துதான்!

அதிகாலை பார்க்காத
உதயங்கள் அத்தனைக்கும்
படிக்காமல் விட்டுவிட்ட
தரமான நூல்களுக்கும்

படித்தேதான்
தொலைத்துவிட்ட
தரமற்ற நூல்களுக்கும்
பிடிவாதப் பிள்ளைகளை

எழுதாத பதில்களுக்கும்
சிரிக்காத நாட்களுக்கும்
பறிக்காத பூக்களுக்கும்
வலிப்பு வந்து சாலையில்
கிடந்தவரை
கவனிக்க விருப்பமின்றி

மோட்டாரில் கடந்ததற்கும்
பலரின் பிறந்ததினங்களை
மறந்ததற்கும்

அடியாக அடித்ததற்கும்
முடிவாகத் தீர்மானம்
செய்யத் துடித்தற்கும்
சன்னல்களை மூடிவிட்டு

கடற்காற்றை தடுத்ததற்கும்
ஓசியிலே வாங்கியதை
திருப்பித் தராததற்கும்
பேசினதைச் செய்யாமல்
சும்மாவே இருந்ததற்கும்
சின்னக் குழந்தைகளை
தனியாக அழைத்துப் போய்க்
கன்னத்தில் கிள்ளிவிட்டு
அலறுமாறு செய்ததற்கும்
பாராட்ட மறந்துவிட்ட
கதைகளுக்கும்
மறந்துவிட்ட கவிதைகளுக்கும்
எரிக்காத கடிதங்களுக்கும்

மனையாள் காத்திருக்க மாடியில்
தனியாக சங்கீதம் கேட்டதற்கும்
பிடிவாதம் பிடிக்கிறது மனசுக்குள்
தெரிந்திருந்தும் பிடிவாதம்
பிடித்ததற்கும்
நண்பர்களை கூட்டி வந்து
சொன்னதையே சொல்லி
போராடித்துத் தீர்த்ததற்கும்
இலக்கியக் கூட்டங்களில்
கவனமின்றி தூங்கிவிட்டு
அரசியல் கூட்டங்களில்
விழித்துக் கொண்டிருந்ததற்கும்
இவ்வாறு எண்ணிக்கை இல்லாத
எத்தனையோ பாவங்கள்
மன்னிக்க வேண்டுகிறேன்

மாண்புமிகு பகவானே!

**எழுதியவர் – திரு சுஜாதா**
**வாசித்தவர் – செல்வி செ. ரம்யா**

## சுனாமி வந்த கடல்

எட்ட நின்று பார்த்த நான்
கிட்ட வந்து பார்த்த போது
சொட்ட நனைந்த உன் மேல்
என் நீரையும், கண் நீரையும்
சேர்ந்தே பார்த்தேன்.
இந்த சந்திப்பு இனி வேண்டாம்
நம் இருவருக்கும் அவசியமான இடைவெளி
அவசியம் வேண்டும்.

**எழுதி வாசித்தவர் – திரு முத்துப் பழனியப்பன்**

## இரக்கம்

மறியே! செம்மறியே!!
மேயப் போகிறாயா? போ!

அதோ அந்த
மலையடிவாரத்தில்
நிறைய மூலிகைகள்
மலிந்து கிடக்கின்றன.

என் கண்களை முட்டிக்கொண்டு
கண்ணீர் வரும்!
புத்தன் கூட உன்னைக்
கையில்தான் ஏந்தினான்

நான் உன்னை
கண்களில்
ஏந்திக்கொண்டிருக்கிறேன்!

தப்பித் தவறி
விஷப்பூண்டுகளில்
வாயை வைத்து விடாதே!

உனக்கு ஒன்று நேர்ந்து
விட்டால்
என் உள்ளம்
குலுங்கி குலுங்கி அழும்
ரொம்பவும் துள்ளாதே!

நிதானமாகப் போ!
முட்டிகளின் எலும்புகள்
முறிந்து விட்டால்
எனவே உன்னைத்
தேடும்படி வைக்காதே!

இருட்டியதும் நீயாகவே வீடு
திரும்பி விடு
திண்ணையில் நல்ல காற்று வரும்

முதுகரிப்புக்கு இதமாக
தூண்களும் இருக்கின்றன.
விடியம்வரையில் ஆனந்தமாக
அசைபோடு!
விடிந்த பிறகுதான் பக்ரீத்

**எழுதியவர் - கவிஞர் வாலி**
**வாசித்தவர் - செல்வன் வயி. ராமநாதன்**

## அன்புக்கும் லாட்டரி

அம்மா என்றால் அம்மாதான்
சும்மா இல்லையடா!

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்து கொடுத்தால்
சங்கத் தமிழ் கூட கைவசமாகிவிடும்!
எந்தவிதப் பிரதிபலனுமின்றி
தன்னணுவின் அணுவான குழந்தைக்கு
உதிரத்தில் அன்பையும், பண்பையும் திரட்டிப்
பாலோடு ஊட்டிடும் அவள்
ஓர் உத்தமத் தாயடா!

வேண்டியது கிடைத்திட
வேண்டாத தெய்வமில்லை.
நாம் வேண்டுவன எல்லாம்
யாசிக்காத போதும் - தனக்கு வேணுமென
யோசிக்காமல் தந்திடும் ஆத்மா
இந்த நூற்றாண்டிலும் உண்டு.

இன்றைய விஞ்ஞானிகளோ
குளோனிங் வரை வந்துவிட்டனர்!
கருவறைக் கதகதப்பின்றி
உருவாக்கிடலாம் உணர்வற்ற

இரும்பு மனிதனை.
அது வேண்டவே வேண்டாம்!
ஏற்கனவே பாதி ராம்போவாகிவிட்ட நாம்,
கவலை என்றால் மடி சாய்வதற்கும்
தோல்வியில் துவண்ட போதெல்லாம்
மறுபடி வீறு கொண்டெழ
ஊக்கம் கொடுப்பதற்கும்
ஆக்கத்தின் உருவாய் தாயிருக்கிறார்.

இன்றோ பணத்திற்குத் தான் லாட்டரி!
தாயின்றி நாம் உருவானால்
அன்புக்கும் லாட்டரி அடிக்கும்
அவல நிலைக்கு ஆளாவோம்.
இன்று அங்கொன்றும்
இங்கொன்றுமாய் அநாதை இல்லங்கள்
நாளை உலகே அநாதை உலகமாய்
மாறும் நிலைமை,
நமக்குத் தேவை தானா?

**எழுதி வாசித்தவர் – திரு கண. மாணிக்கம்**

## அனுபவம்

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்.
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்.
படித்துப் பாரென இறைவன் பணித்தான்.
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்.
அறிந்து பாரென இறைவன் பணித்தான்.
அன்பெனப் படுவது யாதெனக் கேட்டேன்.
அறிந்து பாரென இறைவன் பணித்தான்.
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்.
பணிந்து பாரென இறைவன் பணித்தான்.
மனையாள் சுகம் எனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்.
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்.
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்.
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்.
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்.
வாடிப் பாரென இறைவன் பணித்தான்.
இறப்பின் பின்னது யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்.

அனுபவித்தேதான் அறிவது வாழ்வெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்றே அருகே நெருங்கி
அனுபவம் என்பதே நான்தான் என்றான்.

**எழுதியவர் - கவியரசு கண்ணதாசன்**
**வாசித்தவர் - திருமதி சுதா வெங்கட்**

## செட்டிநாடும், தமிழும்.

கவிபடிக்க வந்திருக்கும் கவிஞர் சிலபேர் - அதை
செவிமடுக்க வந்திருக்கும் நம்மள் பலபேர்.
அனைவரையும் வணங்குகிறேன் கரங்குவித்து,
அடுத்திங்கு முழங்கட்டும் கவிமுரசு.

தலைமுறைக்கு ஒரு கவியை தமிழுக்குத் தருவதென,
வரைமுறையாய் வைத்திருக்கும் வம்சத்தில் வந்தவர்கள்
இலைமறையாய் இருக்கின்ற நம்திறனை யெடுத்துரைத்து,
உலகறியச் செய்யவரும் உயர்கவிகாள் வாருங்கள்.

பாடுவார் முத்தப்பர் நமக்கெல்லாம் முப்பாட்டன்,
பட்டினத்தார் நம்மினத்தில் பாட்டுரைத்த நற்கவிஞன்,
திரையுலகில் உயர்கவியை திறம்படவே தந்தவனும்,
செந்தமிழைச் சந்தமுடன் சேர்த்தளித்து வைத்தவனும்
அந்த சிறுகூடல்பட்டி தந்த நம்மினத்து முத்தையா
உருமாறி உயர்வடைந்தான் கண்ணதாசன் என்னும் பெயரால்.

அறிந்தவர்கள் சிலபேரை எடுத்துச் சொன்னேன் - நாம்
அறியாத பலருண்டு நம்மினத்தில் - அதை
முறையாகப் பலரறியச் செய்யவென்றே - இன்று
முன்னுரைத்தார் கவியரங்கம் என்னும் பெயரால்.

சிகரத்தில் உள்ளவர்கள் சிலபேரின் சிறப்புரைத்தேன்.
நகரத்தார் இதுபோல பலருண்டு என்பதனை
பகரத்தான் இவ்வரங்கில் படையெடுத்தார் பாவோடு - அதை
நுகரத்தான் நாம் விளைவோம், நுண்ணிய நம் செவியோடு.

அந்நாளும் இந்நாளும் எந்நாளும் நம்மவர்கள், சொன்னவைகள்
அத்தனையும், சொற்களல்ல கவிதைகளாம்.
திட்டுவதும் கவியாலே, தேம்புவதும் கவியாலே - அன்பைக்
கொட்டுவதும் கவியாலே, ஆரத்தழுவுவதும் கவியாலே,
இத்தனையும் நம்மவர்க்கு இயற்கையிலே இருப்பதற்கு -அந்த
அத்தனவன் அருளன்றி வேறெதனை நானுரைப்பேன் - நாம்
பாட்டுரைக்கும் பரம்பரையா! இல்லை, இல்லை
பண்ணிசைக்கும் பரம்பரையா! இல்லை, இல்லை

யாப்பறிந்த பரம்பரையா! இல்லை, இல்லை
யாதறிந்த பரம்பரை யாமென்று கேட்டால்,
ஊரறிந்த பரம்பரை நாம்! உலகறிந்த பரம்பரை நாம்!
நாடாண்ட மன்னவனின் நற்கோட்டை உட்புறத்தே,
வீடாண்டு வாழ்ந்தவர்கள் விளைவித்த பரம்பரை நாம்.

நகரத்தார் என்றாலே நாடறியும் நம் புகழை
கோட்டைகட்டி வாழுகின்ற கோமகனார் என்பதனால்,
உலகத்தில் நம்மினத்தோர் சிறுபான்மை என்றாலும்,
உலகறிய வாழுகின்ற உயர்குடியாம் நம் குலத்தோர்.

தமிழுக்கு நாம் செய்த தொண்டுபல என்பதனால்
தமிழ்த்தாயே மனமகிழ்ந்து தவழுகிறாள் நம் வீட்டில்.
அவளளித்த கவியெடுத்து அவைதனிலே நமக்களிக்க
ஆவலுடன் காத்திருக்கும், நற்கவிகாள் உங்களை நான்
தலைதாழ்த்தி வணங்குகின்றேன், தமிழ் கேட்க இணங்குகின்றேன்
வாழ்க தமிழ்! வளர்க நகரத்தார்!

**எழுதி வாசித்தவர் - காரைக் கவி திரு சுப. லெட்சுமணன்**

## யார் அதிர்ஷ்டக்காரன்?

பக்கத்து இலையில் இரண்டு லட்டு.
எனக்கு வைத்தது ஒன்று மட்டும்.
அதிர்ஷ்டம் அவருக்கு என்று நினைத்தேன்
சாப்பிட்டு அவர் இலையை மூடியபோது,
அப்படியே இருந்தன இனிப்புகள் இரண்டும்.
சர்க்கரை வியாதி போலும் - பாவம்
எச்சிலைப் பொறுக்குபவருக்குக் கிடைக்குமோ?
மூவரில் யார் அதிர்ஷ்டக்காரன்?

**எழுதியவர் - ராயவரம் திரு சுப. சுப்ரமணியன்**
**வாசித்தவர் - செல்வி சிவகாமி சுப்ரமணியன்**

## மருத்துவ அறிக்கை

“வாயைத் திற” என்பீர்கள்.
வயிறு தெரியும்படி
வாய் திறப்போம்.

“நாக்கை நீட்டு” என்பீர்கள்
கல்கத்தா காளியாய்
நாக்கை நீட்டுவோம்.
“முதுகைத்திருப்பி மூச்சிழு “என்பீர்கள்

அப்போது தான் உண்மையாய் சுவாசிப்போம்.

அவ்வளவுதான் அஞ்சேல் என்று அருள் வாக்கு சொல்வீர்கள்.

வாசிக்க முடியாத கையெழுத்தில்
வாயில் வராத பெயரெழுதிக்
காகிதம் கிழிப்பீர்கள்.

“மூன்று வேளை...” என்னும் தேசிய கீதத்தை
இரண்டே வார்த்தையில் பாடி முடிப்பீர்கள்.
போதாது டாக்டர், எங்கள் தேவை இது இல்லை

நோயாளி பாமரன்
சொல்லிக் கொடுங்கள்.
நோயாளி மாணவன்
கற்றுக் கொடுங்கள்.

ஒருகால் வீக்கம் - உடனே கவனி.
யானைக் கால் அறிகுறி.
இருகால் வீக்கம் - இப்போதே கவனி.
சிறுநீரகத்தில் சிக்கல் இருக்கலாம்.

வாயிலென்ன ஆறாத புண்ணா
சோதிக்கச் சொல்லுங்கள்
அறியாத புற்று நோய்
ஆனா ஆவன்னா எழுதியிருக்கலாம

நோயாளியைத் துக்கத்திலிருந்து
துரத்துங்கள் டாக்டர்.
நோயொன்றும் துக்கம் இல்லை

சர்க்கரை ஒன்றும் வியாதி இல்லை.
குறைபாடு என்றே கூறுங்கள்.
உணவு முறையைத் திருத்துங்கள்.

தட்டில் மிச்சம் வைக்காதே - வயிற்றில்
மிச்சம் வை.
பசியோடு உட்கார், பசியோடு எழுந்திரு
சொல்லுங்கள் டாக்டர்

உண்மை இதுதான்.
மனிதனைத் தேடி மரணம் வருவதில்லை
மரணம் தேடியே மனிதன் போகிறான்.

**எழுதியவர் - கவிஞர் வைரமுத்து**

**வாசித்தவர் - செல்வன் ஆர். கிருஷ்ணா**

# மரங்களைப் பாடுவேன்

வாரும் வள்ளுவரே!
மக்கட் பண்பில்லாதவரை
என்ன சொன்னீர்?

மரம் என்றீர்

மரம் என்றால் அவ்வளவு

மட்டமா?

வணக்கம் ஔவையே!
நீட்டோலை வாசியான்
யாரென்றீர்?

மரம் என்றீர்
மரம் என்றால் அத்தனை
இழிவா?

பக்கத்தில் யாரது?
பாரதிதானே!
பாஞ்சாலியை மீட்காத
பாமரரை என்னவென்றீர?

நெட்டை மரங்களென்றீர்!
மரங்கள் என்றால் அவ்வளவு
கேவலமா?
மரம்
சிருஷ்டியில் ஒரு சித்திரம்
பூமியின் ஆச்சரியக்குறி
நினைக்க நினைக்க
நெஞ்சூறும் அனுவபம்.

மனிதன் தோன்றுமுன்

மரம் தோன்றிற்று.

மரம் நமக்கு அண்ணன்

மனித வளர்ச்சிக்கு,
முப்பது வந்தால்
முற்றுப்புள்ளி.
மரம் இருக்கும் வரை பூப்பூக்கும்
மரம் இறக்கும் வரை காய்
காய்க்கும்..
வெட்டி நட்டால் கிளை
மரமாகுமே.
வெட்டி நட்டால் கை
உடம்பாகுமா?

மரத்தை அறுத்தால்
ஆண்டு வளையம்
வயதைச் சொல்லும்.

மனிதனை அறுத்தால்
உயிரின் செலவைத் தான்

உறுப்பு சொல்லும்.

மரங்கள் இல்லையேல்
காற்றை எங்கே போய்
சலவை செய்வது?

மரங்கள் இல்லையேல்
மழைக்காக எங்கே போய்
மனுச் செய்வது?

மரங்கள் இல்லையேல்
மண்ணின் மடிக்குள்ளே
ஏதப்பா ஏரி?

உண்ணக் கனி - ஒதுங்க நிழல்
உடலுக்கு மருந்து - உணர்வுக்கு
விருந்து
அடையக் குடில் - அடைக்கக்
கதவு
அழகுக்கு வேலி - ஆட்டத் தூளி

அண்ணனைப் பழிக்காதீர

மனித ஆயுள்
குமிழுக்குள் கட்டிய
கூடாரம்..
மரம் அப்படியா?.. ..

வளரும் உயிர்களில்
ஆயுள் அதிகம் கொண்டது
அதுவே தான்.

தடவத் தைலம் - தாளிக்க எண்ணெய்
எழுதக் காகிதம் - எரிக்க விறகு.

மரந்தான்

மரந்தான்
எல்லாம் மரந்தான்!
மறந்தான்,
மறந்தான்,
மனிதன் மறந்தான்

**எழுதியவர் - கவிஞர் வைரமுத்து**

**வாசித்தவர் - திரு மெ. அழகப்பன்**

## வெங்காயம்

வெங்காயமே! ஓ வெங்காயமே!!
உரிக்க உரிக்க சும்மா இருந்து விட்டு
உரிப்பவனையே அழ வைக்கிறாயே!
உனக்கு மட்டும் ஏன் ஒன்பது கஜ புடவை?
எங்கள் சினிமா நடிகைகளுக்கே சின்ன டவல் போதுமே!

**எழுதியவர் - திரு ராம. வைரவன்**
**வாசித்தவர் - செல்வன் பழ. ராமநாதன்**

## சிங்கை நகரத்தார்.

வாழ்க்கையில் அர்த்தத்தையும்,
வழக்கத்தில் சுத்தத்தையும்
வரையறுத்துக் கொண்டு
வளர்ந்த பரம்பரையில் வந்தவர்கள்.

பொருளைத் தேட இங்கே
பிழைப்பை நாடி வந்தவர்களிடையே,
பொருளோடு வந்து இங்கு
பிழைப்பிற்கு வழி செய்தவர்கள்.
சிங்கை வரலாற்றில்
செட்டியார்களுக்குத் தனி இடம் உண்டு.
வட்டிக்கு விட்ட வசூலில்
வரம்பு மீறியதில்லை.
கட்டிச் சேர்த்த பணத்தில்
கறுப்பாக எதுவும் இருந்ததில்லை.

இருக்கின்ற இடத்தைப் பொறுத்தவரை,
இனத்தாலும், மொழியாலும்
இன்னும் குடியுரிமையாலும்
வேறுபட்ட மக்களிடையே
வேரூன்றி விட்டாலும்,
பண்பாட்டை மறக்காமல்
பாரம்பரியம் கெட்டுவிடாமல்,
நடத்திச் செல்லும் வாழ்க்கைக்கு
நல்லதோர் உதாரணம் சிங்கை நகரத்தார்கள்.

**எழுதியவர் - திரு சித. அருணாசலம்**
**வாசித்தவர் - செல்வி வீர. மீனாட்சி**

----------o----------

# கவியரங்கம்

## தலைமையுரை - பேராசிரியர் முனைவர் சுப. திண்ணப்பன்

செவியரங்கம் கொண்டு, கவியரங்கம் கேட்க வந்த
செந்தமிழ் அன்பர்காள் வணக்கம்!
இலக்கிய விழா என்றனர், இதயம் பூரித்தது. ஏன்?
இலக்கினை எடுத்துரைக்க ஏற்றவழி இதுவே அன்றோ?
இலக்கு என்றால் குறிக்கோள்.
எவ்வினையோர்க்கும் இலக்கு ஒன்று வேண்டும்
இம்மையில் தம்மை இயக்க என்றார்,
மனோன்மணீயம் சுந்தரனார்.
குறிக்கோள் இலாது கெட்டேன்.
கூறினார் நாவுக்கரசர்.
குறிக்கோளை முதலில் கொள்க!
உயர்ந்த குறிக்கோள் உன்னைக் குன்றென உயர்த்தும்.
உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் என்பதே
வள்ளுவன் இயம்பிய வழி.
இலக்கினை எட்டும்வரை இடையறாது முயல்க.
முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்.
இதுவே குறள் தரும் எச்சரிக்கை.
இலக்கியம் பலவகை எனினும் இவற்றுள்
ஏற்றமிக்கது கவிதையே.
கவிதை என்றால் என்ன
கவிச்சக்கரவர்த்தி கம்பனைக் கேட்டேன்.
செவிநுகர் கனிகள் எனச் செப்பினான்.
செஞ்சொற்கவி இன்பமே சீதை என்றான்.
கவிமணியைக் கேட்டேன்.
உள்ளத்துள்ளது கவிதை; இன்ப உருவெடுப்பது கவிதை
தெள்ளத்தெளிந்த தமிழில் உண்மை தெரிந்துரைப்பது கவிதை.
என்றார் அவர்.

கவியரசர் கண்ணதாசனைக் கேட்டேன்.
கவிதை என்பது வடநாட்டுப் பெண்ணைப் போல்
முற்றிலும் மூடி இருக்கக் கூடாது.
மலையாளப் பெண்ணைப் போல் திறந்திருக்கவும் கூடாது.
தமிழ்ப்பெண்ணைப் போல் மூடியும், மூடாமலும் இருக்கவேண்டும்
என்றார்.
கவிப்பேரரசர் வைரமுத்துவைக் கேட்டேன்.
கவிதைக்குப் பொய் அழகு என்றார்.

புதுமைக் கவிஞர் பாரதி புன்னகை பூத்தார்.
சொல் புதிது; பொருள் புதிது; சுவை புதிது
சோதிமிக்க நவகவிதை; அழியாத மாக்கவிதை என்றார்.
கவிதைப் பெண்ணாள் என்னைப் பார்த்து
ஏளனச்சிரிப்பு ஒன்று உதிர்த்தாள்.
ஏன் என்றேன்.
என் பெயரிலேயே கவிதை என்றால் என்ன
என்ற உன் கேள்விக்கு விடைஇருக்கிறதே விளங்கவில்லையா?
என்று வினவினாள்.
கவிதை என்றால் என்ன? கவிதையே விடை கூறுகிறது.
கவிதை என்னும் சொல்லுக்குள் நான்கு சொற்கள்
ஒளிந்து கொண்டு கவிதைக்கு விளக்கம் தந்தன.
முதற்சொல் கவி. கவிஞன் - கவி இல்லையென்றால்
கவிதை இல்லையென்று கட்டியம் கூறியது.
படிப்பவர் உள்ளத்தைக் கவ்வி இழுப்பது தான்
உண்மைக் கவிதை என அது உரைத்தது.
இரண்டாவது சொல் கதை. கற்பனை இல்லாத கதை உண்டோ?
எனவே கற்பனையுடன் கதைப்பதே கவிதை.
மூன்றாவது சொல் விதை. நற்கருத்துக்களை
நவில்பவர், படிப்பவர் நெஞ்சில்
நட்டு விதைப்பதே நல்ல கவிதை.
நான்காவது சொல் தை. தை என்பது தாள ஓசை.
ஓசை நயத்துடன் அமைந்து படிப்பவர் மனதைத்
தைப்பதே பண்புமிக்க கவிதை.
இத்தகு சிறப்புடைக் கவிதை இயற்றி அறுவர் இங்கு
வித்தகம் விளைக்க வந்துள்ளனர்.
அறுமுகன் ஆலயத்தில்
ஆறு கவிஞர் அழகு தமிழில் ஆற்றல் மிக கவிபாடி அரங்கில்
ஏறுபோல் நடக்க எழுந்து வருகின்றார்.
விழிப்புணர்வு வேண்டும் என்பது பொதுத் தலைப்பு.
உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு, எனவோ
உயிர்கள் விழிப்பது தான் பிறப்பே என்று
விளக்கினார் திருவள்ளுவர்.
பதவி வேண்டுமா எனக் கேட்டு அதைப் பெறப்
பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்று பகர்ந்தார்
இராமலிங்க வள்ளலார்.
எழுமின், விழிமின், இடையறாது உழைமின்
என்று தட்டி எழுப்பினார் விவேகானந்தர். எனவே
பிறவிப் பெருமை அடைய அனைவர்க்கும்
விழிப்புணர்வே அவசியம் என்பதை உணர்வதே
இன்றைய தேவை.

விழிப்புணர்வை வலியுறுத்தி வழிகாட்டுவதே இன்றைய இலக்காகும்.
அடுத்து கவிஞர்கள் அறிமுகம்.

## 1) **சித. அருணாசலம். – சிதம்பரம் அருணாசலம்.**

ஒருதலமே காண ஓயாது அலைகின்றோம் நாம். ஆனால் இவரோ இருதலப் பெயரை ஏற்றிய ஏற்றமிக்கவர்.
செட்டிநாட்டார் போற்றும் சிதம்பரம்.
சிறப்புடைய அண்ணாமலை (அருணாசலம்)
தெரிசிக்க முக்தி தருவது சிதம்பரம்.
நினைக்க முக்தி தருவது அண்ணாமலை.
படிக்கப் புத்தி தருவது இவரது கவிதை.
தமிழ்முரசில் ஞாயிறுமலரில் இவர் கவிதை,
தமிழ்மணக்கும் தன்மை கண்டேன்
பருவத்தே பயிர் செய் என்றார் ஔவைப்பாட்டி
அந்தப் பயிர் விழிப்புணர்வாக அமையட்டும்
என்கிறார் அருணாசலம்.
அண்ணாமலை தரும் தமிழருவியைக்
கண்ணாரக் கண்டு காதாரக் கேட்டு
உடலார உவந்து குளிப்போமா? குளிப்போமே!

## விழிப்புணர்வு வேண்டும் – பருவத்தில்

வினைகளை வேரறுத்து
விரல்களில் தமிழ் தந்து
முக்காலமும் உணர்த்தும்
முழு முதற் கடவுளே போற்றி!

தமிழ் எனது மூச்சாகட்டும் – அதன்
புகழ் எனது பேச்சாகட்டும
அன்னை தமிழும், ஆதி பராசக்தியும்
முன்னால் நின்று
என் நா வளம் சேர்க்கட்டும்.

எண்ணியதை முடிக்கும் திண்மை.
எண்ணமெல்லாம் தமிழ், அது உண்மை.
வார்த்தைகளால் வசப் படுத்தத் தமிழில்
தேர்ந்தெடுப்பதில் தனித் திறமை.
காலமெல்லாம் தமிழுக்காய் நேரமொதுக்கிக்
கருத்தொருமித்து விட்ட தலைமையே!

பக்திக்குப் பெயர் போன நகரத்தார்க்குப்
பட்டியல் போட்டு விழிப்பூட்டிய
சக்திக் கவிஞரே!

ஐந்திலே வளைய வேண்டியதையும்,
அதில் விழிப்பு வேண்டுமென்பதையும்,
காட்டி விட்ட கவியரசின் வாரிசே!

பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை – என்று
பொருத்தமாய்ச் சொன்ன சுந்தரக் கவியே!

செகப்பட்டி வகுப்புகளில்
செய்தது போலன்றி,
நிராயுதபாணியாய் வந்து
சமுதாயம் காணவேண்டியதை
அமுதாக்கித் தந்த ஆசிரியரே!

கடைசியாக வந்து
கடை விரித்துக் கவிதை பாடி
வியாபாரத்தை விருத்தியாக்கவிருக்கும்
வைரக் கவிஞரே!

சீனத்து நாடகங்களையும் – அந்நாட்டின்
சிறந்த தோற்பாவைக் கூத்தையும்
பார்ப்பதற்கு ஆளில்லாவிட்டாலும் – வாங்கிய
பணத்திற்காக, மனத்தின் வெறுப்பையும் மறந்து
பரிதாபமாகப் படைக்கும்
கலைஞர்களுக்கு ஏற்படும்
நிலைமையை எங்களுக்குத் தராத அவையோர்களே!

அனைவரையும் வணங்கி மகிழ்கிறேன்.
அடுத்து வார்த்தைகளை முன் வைக்கிறேன்.

## வாலிபப் பருவத்தில்

பருவத்தில் செய்ய வேண்டியதை விடுவதும்
பார்த்து ஒதுக்க வேண்டியதைச் சேர்ப்பதும்,
பாழாக்கும் வாழ்க்கையை – அதில்
பலியாகும் இளமையே!
தனக்கு முன்னால்
விழுபவனைப் பார்த்து
விழாமல் இருக்கவும்,
எழுபவனைப் பார்த்து
எழுந்து நிற்கவும்,

விழித்திருக்க வேண்டும்.
விழித்திருக்கத் தவறிவிட்டால்
வழி தொலைக்கும் வாலிபம்.
வருங்கால வாழ்க்கையை
வளங்காலம் ஆக்குவதும்,
முரண்டு பிடித்து மோசமாகிப் பின்
வறண்ட பாலைவனமாய் ஆக்குவதும்
வேலியை விரும்பாத - இந்த
வாலிபப் பருவம் தான்.

பருவத்தில் கோளாறு வந்தால்
பழக்கத்தில் குளறுபடி வரும்.
பார்வை குதர்க்கமாகிப்
பண்பைச் சீரழிக்கும்.

பருவம் பதின்ம வயதைத் தொடும் - அப்போது
உருவம் புதிய தோற்றத்தைச் சூடும்.
குரல் சிறிது கட்டையாகி
உரக்கப் பேசுவது போலிருக்கும்.
நினைவுகளை எல்லாம்
கனவுகளே நிரப்பும்.
அறிவுரைகளைக் காது கேட்டாலும் - அவை
அறுவை உரைகளாய்த் தான் மனதில் போய்ச் சேரும்.
பெற்றோரை மதியாதது
பெருமையாய்த் தோன்றும்.
ஆசிரியர்கள் எல்லாம்
அற்பமாய்த் தெரிவார்கள்.

படிக்கின்ற காலத்தில்
படிப்படியாய்ச் சிக்கல்கள்
முடிச்சுக்களாய்ப் போடப்படும் - அவை
முழுவதுமாய் அவிழ்க்கப்படாவிட்டால்
முகவரி தொலைந்து விடும்.
தனிமையை நாடுகின்ற மனதிற்கு - எல்லாம்
இனிமையாய்த் தான் புலப்படும்.
கண்ணிமைகள் மூடிய போது
கற்பனையில் காதல் தேடும்.

மாதவன் போல் தங்களை
மனதிற்குள் நினைக்கும் வயது.
திரிஷாவைத் தேடித்
திரிந்தலையும் மனது.
புரையோடிப் போன

திரைப்படங்களின் விளைவினாலும்,
எதார்த்தத்தைத் தொலைத்த
கதாசிரியர்களின் கைவண்ணத்தாலும்,
இளைஞர்களின் வாழ்க்கை பந்தாடப்படுகிறது.
இலையுதிர் காலத்து மரங்களாய்ப் பரிதாபமாகிறது.

அறியாத வயதில்
அத்தனையும் சொல்லிக் கொடுத்து,
பரீட்சைக்குப் படிக்கும் போது
பக்கத்தில் விழித்திருந்து,
புரியாதவற்றைத் தெளிவாக்கிப்
புத்தியில் புகட்டிய
ஆத்தாவிற்கும், அப்பச்சிக்குமா
சரியான துணையைத் தேர்ந்தெடுக்கத்
தெரியாமல் போய்விடும்.
காதல் வரவேண்டியது
கல்யாணத்திற்குப் பின்பு தான்.
கட்டிய துணையைக் காதலிப்பதைக்
காட்டிலும் சிறந்தது வேறுண்டோ?

ஆதலினால் இளையரே,
காதலைப் புறந்தள்ளிப்
கடமையைக் கையிலெடுங்கள்.
படிக்கின்ற காலத்தில்
பாடத்தைக் காதலிப்பீர்.
பருவ விபரீதங்களைப்
பழக்கத்தில் ஏற்காதீர்.
தேர்ந்தெடுக்கும் நட்பிலே
தெளிவு வேண்டும் - அதில்
தேவைப்படும் போது உண்மை
தெரிய வேண்டும்.

கூடாத நட்பு எப்பொழுதும்
கூட்டி வரும் தொல்லையை!
வாடாத வாழ்க்கையையும் சருகாக்கி
வழக்கத்தில் மீறும் எல்லையை - அது

புத்தியைப் பேதலிக்க வைக்கும்
போதைப் பழக்கத்தை - மெதுவாக
வாழைப் பழத்தில் ஏற்றுகின்ற ஊசியைப் போல
வாழ்க்கைப் பழக்கத்தில் சேர்த்து விடும்.

கற்பதில் ஈடுபாட்டைக் கழட்டிவிட்டு

கஞ்சாவை நாட வைக்கும் - இளம்
பிஞ்சாக இருக்கின்ற உள்ளத்தை
நஞ்சாக மாற்றி விடும்.
ஆகையால் இளையரே! அகக்கண் திறந்து
புகைப் பழக்கத்தை ஒதுக்குங்கள் - பெரும்
பகையாக நினைத்துப் போதையை மட்டுமின்றி - அதைப்
படரவிடும் நட்பையும் விரட்டுங்கள்.

காக்கையும், குருவியும்
கட்டிய கூடுகளைத்
தூக்கி வைத்தது போல்
தலையில் அலங்காரம் - உன்
நிலைமை அலங்கோலம்.

கிராமத்துச் சந்தைகளில்
கிடைக்கும் கோழிக்குஞ்சுகளாய்,
விரும்பி அடிக்கப்பட்ட
வண்ணச்சாயம் தலைமுடியில்.

ஒற்றைக் காதில் கடுக்கண்.
சுற்றி வழிக்கப்பட்டு
மேல் மண்டையில் மட்டும்
முடி நாற்றங்கால்.

இளைஞனே! நீ எங்கே போகிறாய்?
செவ்வாய்க் கிரகத்தில்
சென்று வசிக்கலாமா என்றும்
தரகு வேலை செய்து பட்டா போடுவதற்குத்
தயாராகலாமா என்றும்
சிந்தனைகள் வளர்கின்ற காலமிது - இதில்
சிரசில் கோமாளித்தனம் உனக்கு ஏன்?

இளைஞனே! - நீ
கல்வியல் சிறந்து,
கரை கண்டவனாயிருக்கலாம்.
அதற்காக,
வயதில் மூத்தோரை,
வாழ்க்கை அனுபவம் சேர்த்தோரை
வரைமுறை தெரியாமல்,
வரம்பு மீறியே,
வார்த்தைகளால் வதைக்காதே!

இளைஞனே!
பனிப்பாறை கடலில் மிதக்கும் - அதில்

பாதிக்கும் குறைவாகவே வெளியே தெரியும்.
அதுபோலத் தான்
அனைவருக்கும் தெரிகின்ற - உன்
ஆழ்ந்த அறிவும், ஆற்றலும் குறைவு தான்.
அளவில் அதிகமாக
அமுங்கிக் கிடக்கும் அந்த மனப்போக்கு
அதிகம் தெரியாமலிருக்கும் - அந்த
மனப்போக்கே -உன்னை
மதிப்பதற்கும், மிதிப்பதற்கும் காரணமாகும்.

வாலிபத்தில் வீணடிக்கப்படும்
ஒவ்வொரு நாளும்,
வயோதிகத்தின் கணக்கில்
வட்டியுடன் சேரும்.
வாலிபப் பருவம் சரிவர
வார்க்கப் படவில்லை என்றால்,
வயோதிகப் பருவம் முன்னதாகவே
வந்து கதவைத் தட்டும்.

## வயோதிகப் பருவத்தில்

கல்லூரியில் பிள்ளைகள்
கால் வைத்தவுடன்
வயோதிகத்தின் வாசற்படி
வரவேற்க ஆரம்பித்து விடும்.
வாசல் தெரிய ஆரம்பித்ததும்
வழக்கத்தில் மாற்றம் செய்து
வாழ்க்கையின் மாற்றத்திற்குத்
தயாராக வேண்டும்.

உணவு என்பது முதுமையில்
உட்கொள்ளப்படுவதேயன்றி,
உள்ளே அள்ளிப் போடப் படுவதல்ல.
சாப்பிடுவதற்காக வாழ்வதை விட்டு
வாழ்வதற்காகச் சாப்பிடும்
வழக்கத்தைக் கொள்ள வேண்டும்.
உணவை மருந்தாக
உட்கொண்டால்
வைத்தியரைத் தள்ளியே
வைத்துவிடும் தூரத்தில்.

பொதுவாகப் பொறுமை பூணுதல்,
மெதுநடை, தியானம் செய்தல்,

எதுவாக இருந்தாலும் - பலமுறை
எண்ணிச் செயல்படுதல்,
கைத்தடியைக் காட்டிலும்
கைகொடுக்கும் பலவிதத்தில்.

வயோதிகத்தில்,
பேசாத வார்த்தைகள் - என்றும்
பெருமை பெறும்.
காதோரம் நரை வந்து விட்டால்
வாயோரம் வரும் வார்த்தைகள்
வாரிசுகளிடம் பிரதிபலிக்கும் - அவையே
வளர்ச்சிக்கு ஆதாரமாகும்.
நரைக்குச் சாயம் பூசலாம் - கடுமையாய்
உரைக்கும் கறுப்பு வார்த்தைகளை
மறைக்க வெண் சாயம் பூச முடியாது - அதில்
மனத்தை நோக வைத்த காயம் ஆறாது - பின்பு
குரைக்கும் நாய்க்கு ஒப்பாகி
தரைக்கும் கீழே தகுதி போய் விடும்.

சுவைக்காக நோய் சேர்ப்பதையும்,
சுமையாக உடல் சேர்ப்பதையும்
விழிப்புணர்வால் தவிர்த்து
செழிப்புறுவோம் வாழ்வில்.
விளைநிலமாய் பயன்பெறுவோம்.

**- திரு சித. அருணாசலம்**

## <u>பாடல் பிறந்த கதை - 2</u>

அரசியல் மாநாடு ஒன்றிற்குக் கவியரசு கண்ணதாசனும், எழுத்தாளர் ஜெயகாந்தனும் தாமதமாகச் சென்றனர். அப்போது மேடையில் பேசிக்கொண்டிருந்த பெருந்தலைவர் காமராஜருக்கு அவர்களைப் பார்த்ததும் மிகுந்த கோபம் ஏற்பட்டு, மாநாட்டு மேடையிலேயே, அவர்கள் இருவரும் இன்று பேச மாட்டார்கள் என்று அறிவித்துவிட்டார். இவர்கள் இருவரது பேச்சையும் கேட்டு ரசிக்க வந்திருந்தவர்கள் ஏமாற்றமடைந்து விட்டதால், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் வேறொரு நாளில் அவர்களது பேச்சிற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள், பெருந்தலைவருக்குத் தெரியாமலேயே. இதை அறிந்த பெருந்தலைவர் ஏற்பாட்டாளர்கள் மீதும் கடும் கோபமடைந்தார். அதற்குப் பிறகு கவியரசரிடம் பேசுவதையே தவிர்த்து விட்டார். ஒரு முறை கவியரசர் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது அவரது உதவியாளரை விட்டு என்னவென்று கேட்கச் சொன்னார். அதற்கு கவியரசர் நான் அவரைத் தவிர வேறு யாரோடும் பேசமாட்டேன் என்று கூறிவிட்டார். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு பாட்டெழுத வாய்ப்பு

## 2) திரு ராம. வைரவன்

அடுத்து வரும் கவிஞர் ஆர். எம். வைரவன்
ஆர் வைரவன் எனக் கேட்டால்,
எம் வைரவன் எனப் பதில் உரைக்குமாம்,
என் தமிழ்க் கவிதை.
உனக்குள் விழிப்புணர்வு எங்கே எனத்
தேடிவருகிறார்; இல்லை இல்லை பாடி வருகிறார்.
ஆற்றல் மிகு தமிழ்க்கவிஞர்
அமைதியாய்க் கேட்போம் அவர்கவிதை.

## விழிப்புணர்வு வேண்டும் - உன்னில்

என் தமிழ்த் தாயை வணங்கி
நற்  றமிழ்க் கடலில் மூழ்கி
நல் முத்து பலவும் எடுத்து
நா னிலத்தில் நான் உயர்வேனே!

அன்புக் குழந்தைகளே!
உங்கள் அனைவரையும் வணங்கி.
கவிதை உள்ளுக்குள்
உலா போகின்றேன் - அதற்கு முன்,

திண்ணப்பருக்கு ஒரு விண்ணப்பம்
திண்ணப்பரே!
நீ ஓர் தமிழ்ப் பல்கலைக்கழகம்
நானோ தவழும் சிறு குழந்தை
என் மழலைத் தமிழில் மாற்றுக் குறைந்திருப்பின்
பிரம்படி கொடுத்து பெஞ்சின் மேல் ஏற்றி விடாதே!
உன் கைவிரல் கொடு. நான் பிடித்து நடை பயில
தமிழ் நடை பயில. . . .

ஐயா நகரத்தார்களே!
நான் ஒரு வியாபாரி. என்னிடம் பல தொழில்கள் உண்டு.
தொழில் 1- உங்கள் அனைவருக்காகவும்
விழிப்புணர்வுக்கடை
தொழில் 2- பெண்களுக்காக அழகு நிலையம்
தொழில் 3- உங்கள் அனைவருக்காகவும்
புதுமைச்சுற்றுலா.,
ஆக மூன்றையும் ஐயாக்கள் ஆதரவோடு
ஆரம்பித்திருக்கிறேன்

ஒவ்வொன்றையும் விரிவாகப் பார்ப்போம். வாருங்கள்.

## விழிப்புணர்வுக்கடை

இது பண்டமாற்றுக்கடை. பழைய பொருட்களுக்குப் புதிய பொருளை மாற்றிக் கொடுக்கிறோம்.

நயமான பொருட்கள் எங்களிடம் உண்டு.
பொருட்களை வாங்குவோருக்கு இலவச இணைப்பாக
இணையற்ற பரிசுகளும் உண்டு.

நாங்கள் சிறு வியாபாரிகள்.
எங்களுக்கெல்லாம் மொத்த வியாபாரி ஒருவர் உண்டு.
அவர்தான் திருவள்ளுவர்.
அவரிடம் இல்லாத பொருட்களே இல்லை - முஸ்தபா போல
ஆனால் நம்மவரின் கூட்டம்தான் இல்லை

## பண்டமாற்று

நீங்கள் உங்களிடம் 'வெறுப்பு' என்கிற பழைய பொருள் இருந்தால் அதனைக் கொடுத்து விட்டு 'அன்பு' என்கிற புதிய பொருளை எடுத்துச் செல்லலாம்.
இலவச பரிசாக சந்தோசம் உங்களுக்கு.

வெறுப்பை ஏன் விட வேண்டும்?
யோசிப்போமா?

யாரோ ஒருவன்
ஏதோ துன்பம்
செய்து விட்டான் நமக்கு - என
எண்ணிக்கொள்ளுவோம்.

என்ன செய்வோம் நாம்?
எதிரியின் மேல் வெறுப்புக் கொள்ளுவோம்

பழிக்குப்பழி வாங்கிடத் துடிப்போம்
துன்பத்துக்குத் துன்பம் கொடுத்திட நினைப்போம்.
வெற்றி பெற்றால் அது வீரம்
தோல்வியுற்றால் அது அவமானம்
இதுதானே இயல்பு. . .

வெறுப்பு உள்ளே வந்ததும்
மனதில் கவலை சூழ்ந்தது
வாழ்க்கையில் நிம்மதி தொலைந்தது
வெறுப்பை உள்ளே வந்து உட்காரச் சொன்னது யார்?
நாம்தானே? – அதனால்தான்
வெறுப்பை விடச் சொல்லுகிறேன்
அன்பைத் தொடச் சொல்லுகிறேன்.

## பண்டமாற்று 2

உங்களிடம் 'சந்தேகம்' என்கிற சாயம் போன கண்ணாடி இருந்தால் அதற்கு மாற்றாக 'நம்பிக்கை' என்கிற நயமான கண்ணாடி எங்களிடம் உள்ளது.

'சந்தேகம்' ஏன் விட வேண்டும்?
விரிசல்களை ஏற்படுத்தும்
இந்த விஷச் செடி

'இப்படி இருக்குமோ' இல்லை
'அப்படி இருக்குமோ' என்று
கற்பனையில் கவலை வளர்க்கும் இக்குணத்தை
கட்டோடு விட்டுவிட்டால்
சந்தோசமாய் வாழலாம்.

இன்னும் பல நல்ல பொருட்கள் எங்களிடம் உள்ளன.
உங்கள் பணப்பை மீது எங்களுக்குக் கண் இல்லை.
உங்கள் மனப்பையில் இடமிருந்தால் அதுபோதும்.
வாருங்கள் வந்து பண்டமாற்றிச் செல்லுங்கள்.

## அடுத்து. அழகு நிலையம்

நீங்கள் உலக அழகிகளாக உலா வர வேண்டுமா?
வாருங்கள் எங்கள் .அழகு நிலையத்திற்கு . . .

பல் எடுப்பாய் இருக்கிறதே
என்று பதற வேண்டாம்
தோல் கருப்பாய் இருக்கிறதே
என்று துவள வேண்டாம்
எங்களிடம் யோசனைகள் பல உண்டு. . .

பாலாடைக் கட்டி எடுத்து
பத்து நாட்களுக்கு முகத்தில்
பத்து போட்டுக்கொண்டால்
பளபளப்பாகிவிடும் உங்கள் முகம் - என
பகரப்போவதில்லை நான்

அழகு நிலையம் போகுமுன்னே
அழகு எது என அறிந்து கொள்வோமா?

எது அழகு?

உதட்டில் சாயம் இடுவதிலா?
உதட்டில் உண்மை தவழ்வதிலா?
கவர்ச்சி உடைகள் அணிவதிலா?
கள்ளம் கபடம் களைவதிலா?

முகத்தில் புருவம் வரைவதிலா?
மூத்தோர் மதித்து நடப்பதிலா?
நகத்தில் சாயம் இடுவதிலா?
நல்லோர் சொல் கேட்பதிலா?

நகைகள் பூட்டிக் கொள்வதிலா?
நட்பாய் அன்பாய் இருப்பதிலா?
பகட்டாய் மினுக்கித் திரிவதிலா?
பண்பாய் நடந்து கொள்வதிலா?

அழகு எதுவென அறிந்து கொண்டால்
அழகாய் இருப்பது எளிதாமே
அதிகப் பணமும் செலவு இன்றி
அழகாய்த் தினமும் இருந்திடலாம்

நல்ல பழக்கங்கள் கைக்கொண்டால்
நாளும் அழகாய் இருந்திடலாம்
எப்படி எங்களின் யோசனைகள்?
எண்ணிப்பாருங்கள்

## அடுத்து, புதுமைச்சுற்றுலா

நீங்கள் இதுவரை போகாத இடம், அவசியம் பார்க்க வேண்டிய இடம்
உலகம் சுற்றியிருப்பீர்கள் நீங்கள், உங்கள் உள்ளத்துக்குள் சுற்றியிருக்கிறீர்களா?
உள்ளத்துக்குள் ஓர் உலா, அதுதான் எங்களின் புதுமைச்சுற்றுலா

கட்டணம் ஏதுமில்லை

கண் மூடிய சுற்றுலா
ஆம், புறக்கண்களை மூடி
அகக் கண்களைத் திறந்து - உங்கள்
ஆழ் மனதை அறியும் சுற்றுலா

நீங்களே ஓட்டுனர்
நீங்களே பயணி
நீங்களே பார்வையாளர்
நீங்களே பார்க்கப்படுபவர்

விபத்து இல்லை! விரயம் இல்லை!
உங்களைச் சுத்திகரிக்கும் இந்தச் சுற்றுலா
உள்ளத்துக்குள் ஒட்டடை அடிக்கலாம்
உங்களைச் சீரமைக்கலாம்
தேவையற்ற கழிவுகளை அகற்றலாம்
தேவையானவற்றை அடுக்கி அழகுபார்க்கலாம்
தெளிவு பிறக்கும்!
அன்றுமுதல் நீங்கள் புதிய மனிதர்!
உங்கள் பார்வை புதிய பார்வை!
உங்கள் வாழ்க்கை புதிய வாழ்க்கை!

## ஆச்சிமாரே! அண்ணன்மாரே!

ஆர அமர உட்கார்ந்து
அலசிப் பாருங்க
உண்மையோடு உங்க உள்மனசை
உரசிப் பாருங்க
என்ன இருக்கு? என்ன இல்லை?
எண்ணிப் பாருங்க
நல்ல குணம் கெட்டகுணம்
கணக்கு எடுங்க
கெட்டகுணம் அத்தனையும்
விட்டு ஒழியுங்க
நல்ல குணம் அத்தனையும்
மேலும் வளருங்க
வெறுப்பு, கோபம், காமம், குரோதம்
விட்டு ஒழியுங்க
பிற உயிரும் தம் உயிர் போல்
எண்ணிப் பாருங்க
குரங்கு மனம் தாவி ஓடும்
கண்ட இடமெல்லாம் - அதனைக்
கட்டிப் போட்டு கட்டுப்படுத்த

கற்றுக் கொள்ளுங்க
வீடு கூட்டி சுத்தம் செய்தால்
வீட்டுக்கு அழகுதான்! - அது போல்
மனசு கூட்டி சுத்தம் செய்தால்
மனுச னாகலாம்!

**திரு ராம. வைரவன்**

<u>**பாடல் பிறந்த கதை - 3**</u>

கவியரசர் கண்ணதாசன் திராவிட முன்னேற்றக் கழகத்தில் 10 ஆண்டுகள் உறுப்பினராக இருந்து வெளிவந்தவுடன் அவருக்கு **ஆலயமணி** படத்தில் பாட்டெழுதும் வாய்ப்பு கிடைத்தது. கதைக்கு ஏற்றவாறு தனது அரசியல் பிரவேசத்தில் ஏற்பட்ட மாற்றத்தையும் அழகாக எழுதிவிட்டார். எல்லோரும் கதைக்காக எழுதப்பட்ட பாடல் என்று தான் நினைத்தனர். ஆனால் தான் திமுகவை விட்டு வந்த சந்தோஷத்தில் எழுதிய பாடல் என்பது நிறையப் பேருக்குத் தெரிந்திருக்காது. அந்தப் பாடல் இது தான்.

**சட்டி சுட்டதடா! கை விட்டதடா!**
**புத்தி கெட்டதடா! நெஞ்சைச் தொட்டதடா!**
**நாலும் நடந்து முடிந்த பின்னே**
**நல்லது கெட்டது தெரிந்ததடா!**

## 3. திரு க. வெங்கடாசலம்.

சிங்கப்பூர் பலதுறைக் கல்லூரியில்
சிறப்புமிகு பணியாளர்.
வெங்கடாசலம் வெல்லத் தமிழ்க்கவிதை பாட
வேகமாய் வருகிறார் இதோ!
குழலினிது, யாழினிது என்ப தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்.
பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.
படைப்புப் பல படைத்துப்
பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நட்பு.
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்.
நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறு இல்லை தாம் வாழும் நாளே - என்று
பாடினார் பாண்டியன் அறிவுடை நம்பி - இத்தகு
குழந்தைப் பருவத்தில் கொள்ளும் விழிப்புணர்வு யாது?
கூற வருகிறார் வெங்கடாசலம்.

## விழிப்புணர்வு வேண்டும் - குழந்தை வளர்ப்பில்

எழிலார்ந்த இடம் தேடி இருக்கை கொள்வான்.
எவ்விடத்தும் எளியவனாம் இல்லம் கொள்வான்
பொழிலார்ந்த நிலைகளிலே பொருந்தி நிற்பான்
புகழோடு பொருள் தந்து பொலியும் வேலன்.

அழியாத துயரங்கள் அழிய வேண்டின்
அவனடியே சரணென்பார் அடியார் இன்று
தொழிலாளர் உருவாக்கும் கோவில் கொண்டான்.
தும்பிக்கையானடியைத் தொட்டுத் தொடங்குகின்றேன்.

அன்னை தமிழை வணங்கி
தமிழாய் வாழும் ஐயா திண்ணப்பரையும் வணங்கி
என்னோடு கவிதை படிக்கும் என் சகாக்களையும் வணங்கி
அந்தி சாயும் வேளையில் ஆர்வத்தோடு தமிழ்மாலை
அருந்த வந்த உங்களையும் வணங்கி என்கவியைத்
தொடங்குகின்றேன்.

தமிழை அழைத்துத் தலைவராக்கி
சபையின் நடுவே அமர வைத்து

பிள்ளை வளர்ப்பில் விழிப்புணர்வு
வேண்டும் என்ற காரணத்தால்,
கவியரங்கம் நடத்திட்டார் - சிங்கப்பூர் நகரத்து மன்றத்தார்.

வாய்ப்புக்கு நன்றி சொல்லி
நான் அறிந்த வகையினை
வளர்க்கும் முறைதனை சொல்லிட
நானும் இன்று வந்திட்டேன்.

கவிதையைத் தொடங்கும் முன்
சிறு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகின்றேன்.
நான் கண்ணதாசனின் கடைக்குட்டி
பிள்ளை வளர்ப்பில் கத்துக்குட்டி
இருப்பினும் கவிதை சொன்னேன்.
இயன்றவரை தமிழில் சொன்னேன்.
பிழையிருப்பின் பொருத்தருள்வீர்
பிடித்திருப்பின் கரகோஷமிடுவீர்.

கருவுற்ற நாட்களில் எல்லாம்
கற்பனைச் சிறகை விரித்திடுவார்
கனவு அது நிஜமாகும்
காலத்திற்குக் காத்திருப்பார்.

பெற்றோர் அறியா உலகமெல்லாம்
பிள்ளை அறிய வேண்டுமென
அளவில்லா ஆசை கொண்டு
வளர்க்கும் முறை வாதிடுவர்.

பெயர் விளங்க வேண்டுமென
பாட்டன் பெயரைத் தந்திடுவார்.
பெயருக்குப் பின் வரும்
பட்டமும் இவரே முடிவுசெய்வார்.
பிள்ளை வந்து பிறந்திடவும்
எல்லாம் இங்கே மாறிவிடும்.
கற்பனையில் வளர்ந்த குழந்தை
நிஜத்தில் இங்கு வேறாகும்.

நம்பி விதைவிதைத்து
நாளும் நீர் இறைத்து
நல்ல உரமும் இட்டு
வெய்யிலில் விட்டு வைத்து
மரம் வளர்க்கும் கலை அறிவார் - இவர்
பிள்ளை வளர்க்கும் வழி அறியார்.

அடக்கி வளர்க்கும் முறை அது
பொறுப்பாய்ப் பிள்ளை வளர்ப்பது
என்றொரு தப்புக் கணக்கை
பெற்றோர் எல்லாம் போட்டிடுவர்.

அடக்கி வளர்க்கும் எதுவும்
அடங்கி இருக்கும் சிலகாலம்.
அழுத்தம் கொஞ்சம் கூடிட
வெடித்துக் கிளம்பும் ஓர்நாளும்.
அடுக்குமாடிக் கட்டடத்தில்
அடக்கி வைத்த பிள்ளையெல்லாம்
முருகன் கோயில் என்றாலே
முகமலர்ச்சியோடு ஓடிவரும்.

நான்கு சுவர்களுக்குள்
அடங்கிப்போன ஆசையெல்லாம்
நிஜமாகும் இடம் இது
பிள்ளை பிள்ளையாகும் இடம்இது.
ஐந்தறிவு மிருகத்திற்கு
அடக்குமுறை சரியாகும்.
அன்பு என்ற ஒன்று மட்டும்
மனிதனை இங்கு மனிதனாக்கும்.

அடித்து வளர்க்கும் பிள்ளை
அடிபணிந்து போவதுண்டு
அடிக்கடி அடிக்க
சொரணையும் போவதுண்டு.
செல்லம் கொடுத்து வளர்ப்பதால்
தீமையும் வருவதுண்டு
கேட்கும் பொருள் யாவையும்
பெற்றோர் வாங்கித் தருவதால
பேராசையும் வருவதுண்டு.

தவமிருந்து பெற்ற பிள்ளை
தட்டுக் கெட்டுப் போகாமல்
தன்னை அறியும் வித்தை சொல்லி
தழுவி அணைத்து வளர்த்தால்
தங்கப் பிள்ளையாகும் வளர்ந்து
தரணி ஆளும் ஓர் நாளில்
தழுவி அணைக்கையில்
தட்டி வளர்த்தால்
தன்னை உணர்ந்துவிடும் - அது
பாரினில் உயர்ந்து விடும்.

தன்னைப் பிள்ளை அறிய
உலகம் அறியும் பிள்ளையை.
உலகம் அறியும் பிள்ளையை
பெற்றவர் பெறுவர் பெருமையை.
பெருமை பெற பெற்றோருக்கு
பொறுமை மிக அவசியம்.
பொறுமை அற்றுப் போயிட
நேரும் பெரு அவஸ்தையே.

கோபத்தில் வார்த்தைகள்
வேகமாய் வந்து விழும்.
அவற்றையும் பிள்ளைகள்
கவனமாய்க் கற்றுக் கொள்ளும்.

தங்கமான பிள்ளைகள் வளர்வது
அன்னையின் கைகளிலே
அவை தடம் மாறிப் போவதென்றால்
தந்தையின் வழியினிலே!
அன்பும் பண்பும் பாசமும்
அன்னை வழி வருபவை
படிப்பும் அறிவும் ஒழுக்கமும்
அப்பா காட்டி வருபவை.
மாறாது இவை யாவும்
பிள்ளைக்கு வேண்டுமென்றால்
அன்பான குடும்பம் ஒன்றே
உருவாக்கிட வேண்டும் பெற்றோரும்.

தாய்வழி வந்த மொழி
தரமான தமிழ்மொழி
தடம் அழிந்து போகாமல்
பெற்றோர் தானே காக்க வேண்டும்.
மம் என பிள்ளைகள் அழைக்க
உம் என் தாய் இருந்தால்
தப்பு எனப் பிள்ளை உணர்ந்து
அம்மாவென தினம் அழைக்கும்..

மம் என பிள்ளை அழைக்க
அகமகிழ்ந்தாள் தாய் என்றால்,
மேக்ஸிமம் ஆவாள் பெரியம்மா
மினிமம் ஆவாள் சித்தி அவளும்.
வெளிஉலக வாழ்க்கைக்கு
ஆங்கில அறிவை ஒதுக்கி வைத்து
அன்பான குடும்பம் அதில்

அழகான தமிழ் வளர்ப்பீர்.
ஆங்கில மொழியில் வந்த சிக்கனத்தை
வாழ்க்கைக்குச் சொல்லித் தந்து
பிள்ளையின் வளமான வாழ்விற்கு
அடித்தளத்தை அமைத்திடுவீர்.

வளர்ந்து வரும் வேளையில்
அறிவுரை மட்டும் சொல்லி
வளர்க்க நீங்கள் முற்பட்டால்
விபரீதமே விளையும் வீட்டில்.
நம்பிக்கை விதை விதைத்து
தன்னம்பிக்கை அடையச் செய்து
நல்ல பழக்கங்கள் சொல்லித் தந்து
தெய்வத்தையும் காட்டி வைத்து
தரமான கல்வி தந்து
சுயசிந்தனையில் வாழவிட்டால்
காலத்தை வென்று பிள்ளை
அழியாத புகழ் பெறும் - ஆதலால்
உயிர் வாழும் வகை சொல்லி
உறவுகளை இனம் காட்டி
உதவிக்குத் துணை நின்று
பிள்ளை வளர வழிவிடுவீர்!

- **வெங்கடாசலம் கண்ணதாசன்**

<u>பாடல் பிறந்த கதை - 4</u>

கவியரசு கண்ணதாசன் அவர்கள் ஒரு படத்திற்காக நாயகியை வர்ணித்து எழுதிய பாடல் இது.

**எண்ணிரண்டு பதினாறு வயது - அவள்**
**கண்களுக்குள் காணுதம்மா காதல் கொண்ட மனது.**

இதைப் படித்த இயக்குனர், எல்லாம் சரி தான் அண்ணன்.
ஆனால் கதாநாயகிக்குப் பதினாறு வயசுன்னு எழுதியிருக்கீங்க, பார்த்தா அப்படி இருக்காது. இங்கே தான் உதைக்குது என்றார். அதற்கு கவியரசரோ, நான் சரியாத் தான் எழுதியிருக்கேன். பாடலை நல்லாப் படிச்சுப் பாருங்க, எண்ணி 2 பதினாறு, ஆக 32 வயசு. சரிதானே என்றார். தனது சிந்தனையில் எல்லாவற்றிற்கும் ஏற்றாற் போல் எழுதக் கூடிய திறமை

## 4) அழகு சுந்தரம்.

பழகு தமிழில் பாவரங்கு ஏற வருகிறார்
அழகு சுந்தரம் அருமைக் கவிஞர்.
ஓரழகுக்கே ஓடித் திரியும் இவ்வுலகில்
ஈரழகுப் பெயர்பெற்ற ஏந்தல் இவர்.
மின்பொறியாளர், மேலான கவிஞர்.
அன்பொழுகப் பாடுவார் அருந்தமிழில்.
பொருளியல் விழிப்புணர்வு எனும் பொருள் பற்றி
அருவி எனப் பாடவருகிறார் அமர்ந்து கேட்போம்.

### விழிப்புணர்வு வேண்டும் - பொருளாதாரத்தில்

மதியுரை அமைச்சர் என்றும், நீக்குப் போக்கு என்றும்
குறுந்தகவல் சேவை என்றும், அதிர்வுசீர் அலைவரிசை
என்றும்,
பதின்ம வயதுவரை நான் தமிழ்நாட்டிலும் கேட்டிராத
தமிழ் வார்த்தைகளை எனக்குக் கற்றுக் கொடுத்தது
கடுகளவே ஆனாலும் காரம் சற்றும் குறையாத
சிங்கைத் திருநாடு.

அந்தத் திருநாட்டில் நிரந்தரவாசம் மட்டுமின்றி,
அரசாளும் யோகமும் பெற்ற தமிழ்த்தாயே!
இங்கு மட்டுமல்ல தமிழ்கூறும் நல்லுலகம்
எங்கெங்கு இருந்தாலும், அங்கெல்லாம் உனதுபுகழ்
திக்கெட்டும் பரவட்டும்,
தமிழ் வாழ்வாங்கு வாழட்டும்.

சிந்தனைச் சுடராய், புன்னகை முகத்தால்,
நித்தமும் தமிழ்த்தொண்டு ஆற்றிவரும் அவைத்தலைவா!
தேசியக்கல்விக்கழகம் முதல்
தேசிய பல்கலைக்கழகம் வரை,
நித்தம் தமிழ்த்தொண்டு ஆற்றிவரும் சூரியன் நீ.
மழைக்கு ஒதுங்குபவர்களாய் என்றேனும் ஒருநாள்,
சிறுபிறையாக வானத்தில் தோன்றிடும் நிலவு நான்.

முழுநேர சூரியத்தலைவரிடம், பகுதிநேர நிலவுக்கவிஞனின்
அன்பான வேண்டுகோள்.
என்கவியில் குறையேதுமிருப்பின், நீ உன்
நெற்றிக்கண்ணைத்
திறக்க வேண்டாம்.
உன் மோதிரக்கையால் குட்டொன்று கொடுத்தால் போதும்.
அப்படியாவது தமிழ் என் தலைக்குள் இறங்கட்டும்.

கற்பனை நெய்யூற்றி, கருத்துத்திரியிட்டு,
தமிழ்சுடர் ஏற்றிக்கொண்டிருக்கும் சக கவிஞர்களே,
தமிழ்த் தாகம் மிகக்கொண்டு, தொலைக்காட்சிப்பெட்டி மறந்து,,
சந்திரமுகி, அந்நியன் தவிர்த்து,
டேங்க் ரோடு, தண்டாயுதபாணியின் வரவேற்பறைக்கு
தமிழ்ப்பால் அருந்த வந்த தமிழ் நெஞ்சஙகளே!
பெரியோர்களே, தாய்மார்களே, குழந்தைகளே,
அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்.

படைதனில் தூங்கியவன் வெற்றி இழந்த கதையும்
கடைதனில் தூங்கியவன் முதல் இழந்த கதையும்
பள்ளிதனில் தூங்கியவன் கல்வியிழந்த கதையும்
பட்டுக்கோட்டை அழகாக பாட்டில் சொன்னான்.

விழிப்புணர்வு என்றால் என்ன?
தூங்காத நிலையென்பது விழிப்புணர்வு ஆகாது.
கண் விழித்திருந்தால் அது தூங்காத நிலை.
மனம் விழித்திருந்தால் தான் விழிப்புணர்வுநிலை.

செல்வம் கொழிக்கும் இந்த சிங்கைத் திருநாட்டிலும்,
விழிப்புணர்வு இல்லாமல் நாம் இருந்து விட்டால்,
அது நம் அழிவிற்கு வித்தாகும்.
ஆகவே வந்தது தான் இந்தத் தலைப்பு
விழிப்புணர்வு கொள் என்னும் சிறப்பான தலைப்பு.

சந்திரவதனி கண்கள்
சாடையிற் பார்த்தாற் போதும்,
தாய்விழி பட்ட கல்லும்
தரணியில் தங்கமாகும்!
எந்தவோர் பதவி வேண்டேன்,
எளியனுக்கருள் செய்வாயே!
இகத்தினில் செல்வம் தந்து
இயக்குவாய் கமலத்தாயே! என்று
கண்ணதாசன் உருகியது எதனால்?

ஒருகோடி ரூபாயைக்கூட தன் சட்டைப்பையிலிருந்து
எடுக்கக் கூடிய சூப்பர்ஸ்டார் கூட
ஏழுமலை தேவுடாவை தன்பக்கம்
சூடச்சொல்வது எதனால்?

அவனன்றி ஓரணுவும் அசையாது என்பது அந்தக்காலம்

இதுவன்றி ஓரணுவும் அசையாது என்பது இந்தக்காலம்..
ஆம் பொருள் தான் இந்தக் காலத்தின் ஆதாரம்.
ஆகவே என் கிளைத்தலைப்பு பொருளாதாரம்.
பொருளாதாரத்தில் விழிப்புணர்வு என்னும்
வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தலைப்பு.
முதலில் வீடு பற்றி.. .. .
குடியுரிமை, நிரந்தர வாசம் பெற்றோரே,
குறைந்த பட்சம் ஐந்தாண்டுகள்
சிங்கையில் இருப்பதாக நீங்கள் முடிவு செய்தால்,
வீடொன்று வாங்குவது நலமென்பது என் கணக்கு.
96ல் வீடு வாங்கியவர்கள் மட்டும் அதற்கு விதிவிலக்கு.
விந்தை புரியும் சந்தை மாற்றம்
விற்கும் பொழுதில் இன்னல் கொடுக்கும்.
சந்தை விலை ஏற்றம் கண்டால் லாபம் உச்சம்.
சந்தை விலை வீழ்ந்து விட்டால் வாடகை மிச்சம்.

வீடு வாங்காதவர்கள் விரைவில் வீடு வாங்குங்கள்
மூவறையில் உள்ளவர்கள், நான்கறைக்கு மாறுங்கள்.
நான்கறையில் உள்ளோரே, தனியார் வீடு வாங்குங்கள்.
தனியார் வீடு கொண்டோரே, தரை வீடு வாங்குங்கள்.
மாத வருமானத்தில்,
மூன்றில் ஒருபங்கிற்குள்,
வீட்டுக்கடனின் மாதாந்திர தவணைத்தொகை
இருக்க வேண்டுமென்பது
வல்லுநர்களின் அறிவுரை.
படிப்படியாய், முதலீட்டை விரிவு செய்து
சிறுவாபுரி முருகன் அருளால்
சிறந்த வீடொன்று வாங்கி,
சிறப்பாக வாழ்ந்திடுங்கள்.

சிறுவாபுரி முருகன் பற்றி இங்கே ஒரு
சிறுசெய்தி சொல்ல வேண்டும்.
சென்னையிலிருந்து கும்மிடிப்பூண்டி
செல்லும் பாதையில்
முப்பத்தைந்தாவது கிலோமீட்டரில்,
முனைப்பாக வீற்றிருக்கிறான் சிறுவாபுரி முருகன்.

வீடு சம்பந்தப்பட்ட அனைத்து சிக்கல்களையும்,
விடுவிப்பதில் வல்லவன் அவன்.
ஆறு வருடங்களுக்கு முன் சிதிலமடைந்த
நிலையிலிருந்த
ஆலயத்தைத் தத்தெடுத்தனர் தமிழ்மக்கள்.
குறிப்பாக நகரத்தார் ஒன்று சேர்ந்து

கும்பாபிஷேகம் செய்ததனால்
அடையாளம் தெரியாமல் மாறிப்போனது
ஆலய வளாகம்.

தங்கும் இடவசதி முதல்
திருமண மண்டப வசதி வரை,
எல்லா வசதிகளும்
ஏராளம் இப்போது.
நகரத்தார் பெருமையினை எனக்கு
நன்கு உணர்த்தியது
சிறுவாபுரியின்
சீர்மிகு வளர்ச்சி.
வாய்ப்பு கிடைத்தால் சென்றுவாருங்கள்
வரங்களை அள்ளி வாருங்கள்.

அடுத்தது கடன்பற்று அட்டைபற்றி.. .. ..
கடன்பற்று அட்டையொன்றை
உடன் உங்களுக்குத் தந்திடவே
கங்கணம் கட்டிக் கொண்டு
வங்கிகள் பல வரிசையில் நிற்கும்.

ஆண்டுச் சந்தா இல்லை என்றும்
மனைவிக்கு இலவசம் என்றும்
வட்டிக் குறைவு என்றும்
அட்டையை அக்கூட்டம் விற்கும்.

கவனமாய்ப் பயன்படுத்தினால்
இந்த அட்டையால் பேரின்பம்.
கவனக்குறைவாக இருந்து விட்டால்
வந்திடுமே பெருந்துயரம்.

அட்டைதானே என்று எதையும்
சட்டைசெய்யாமல்
கணக்கின்றிப் பொருள் வாங்கித்
தேய்த்துவிடும் அன்பர்களே - எச்சரிக்கை.

மாதக் கடைசியில் சூரா ஒன்றுவரும்
வீராப்பைக் குறைத்துவிட்டு
நேராக கட்டணம் செலுத்தும்
தெம்பு உங்களுக்கு உண்டா - யோசியுங்கள்.

முழுக்கட்டணம் செலுத்திவிட்டால்,
வட்டியில்லை உண்மைதான்.
குறைக்கட்டணம் செலுத்தினால்,

வட்டியுமுண்டு, வட்டிக்குக்
குட்டியுமுண்டு -நினைவில் கொள்ளுங்கள்.

ஆண்டின் இறுதியில் சந்தா கட்டச்சொல்லி
சத்தமின்றி ஒரு ஓலை சங்கடமாய் வந்துசேரும்.
கடன்பாக்கி இருந்துவிட்டால்,
கடனும் கட்டி, வட்டியும் கட்டி
சந்தாவும் கட்டவேண்டும் - சாதிக்கும் வங்கிகள்.

கடன்பாக்கி இல்லையென்று நெஞ்சு நிமிர்த்தி
சந்தாவா கேட்கிறாய் - வேண்டாம் உன் அட்டை
என்று நீங்கள் கூறிவிட்டால்,
இந்தமுறை சந்தாவை வாடிக்கையாளர் நலன்கருதி
தள்ளுபடி செய்தோம் என்று பம்மிவிடும் - அதே வங்கிகள்.
கெஞ்சினால் மிஞ்சுவதும்,
மிஞ்சினால் கெஞ்சுவதும்,
அவர்களுக்கு வாடிக்கை.
நமக்கு வேண்டாம் இந்த வேடிக்கை.

நாம் குனியக் குனியக் குட்டுவதும்,
நாம் குட்டக் குட்டக் குனிவதும்
வங்கிகளின் வியாபார தந்திரம்.
இதில் சிக்கிக் கொள்ளாமல் தப்பிக்க
விழிப்புணர்வு தான் நமது மந்திரம்..
வங்கியில் பணிசெய்யும் அண்ணன்களே - மன்னியுங்கள்
இவையனைத்தும் என் சொந்தக்கருத்து தான்.

அடுத்தது பங்குச்சந்தை பற்றி' .. ..

அன்றாடம் ஏற்றம்.
அன்றாடம் இறக்கம்.
சிங்கையில் பங்குச்சந்தை.
பலருக்குப் புரியாத விந்தை.
இளகிய மனம் கொண்டோர்க்கும்
பொறுமையற்றோர்க்கும்
இச்சந்தையில் இடம் சத்தியமாய் இல்லை.

பற்பல செய்திகளை ஆய்வு செய்து,
நல்ல பங்காய்த் தேர்ந்தெடுத்து,
பொறுமையாய்க் காத்திருந்து,
லாபம் பெறுவது நன்மை பயக்கும்.

பேராசை மிகக் கொண்டு,
அதிரடியாய் வாங்கி விற்று

பெருநஷ்டம் அடைந்தவர்கள்
பலரும் இங்கு உண்டு.
வாங்கிய பங்கின் விலையை,
தினசரி ஆய்வு செய்து
விலை ஏறினால் லாபம் எடுப்பதும்,
விலை குறைந்தால் நஷ்டம் குறைப்பதும்,
அத்தியாவசிய வேலை.

என்றாவது ஒருநாள், கணினி முன் அமர்ந்து
நானும் பங்கு வியாபாரம் செய்கிறேன் என்று
மூக்கை நுழைத்தவர்க்கு, சுவாசிப்பதற்கு
மூக்கு மிஞ்சவில்லை!
காலை வைத்து ஆழம் பார்த்தவர்களின்
கால் மட்டுமல்ல
ஆளே காணாமல் போனார்கள்.

அடுத்ததாக,
எல்லா முதலீட்டிலும் குறைந்தபட்சம் ஒரு வருடமாவது
காத்திருந்தால் தான் வட்டி வந்து சேரும்.
ஆனால் ஒரே ஒரு முதலீட்டில் மட்டும்
முதலீடு செய்தவுடன் வட்டி தானாய்
வந்து சேரும்.
ஆம் தங்கத்தில் முதலீடு செய்தால் உடனே வட்டி,
நான் வட்டியென்று சொன்னது,
ஆச்சியின் புன்னகையை,
அன்பான உபசரிப்பை.
எத்தனை கோடி வந்தாலும்,
இந்த வட்டிக்கு எந்த வட்டியாவது நிகராகுமா?

சிறு சிறு ஆபரணங்களாய் வாங்கி
சுண்டக்காய் கால்பணம்
சுமைகூலி முக்கால் பணம் என
செலவு செய்வதை விட
பெரிய ஆபரணங்களை வாங்கி வைத்தால்,
அதுவே நல்ல முதலீடாகும்.

கடந்த ஐந்தாண்டுகளில் தங்கம்விலை
மெதுவாய் உயர்ந்த வண்ணம் தான்
உள்ளது என்பதையறிவீர்.

இறுதியாக,
தமிழ் இருக்கும் இடத்தில் செல்வமும்,
செல்வம் இருக்கும் இடத்தில் தமிழும்,
இருக்க வேண்டும் என்கிற என் ஆசையை இந்த

தண்டாயுதபாணியின் அரங்கத்திலே
பதிவுசெய்து
விழிப்போடு இருங்கள்,
செழிப்போடு வாழுங்கள் என்று
அனைவருக்கும் வாழ்த்துக்களைக் கூறி
வாய்ப்பிற்கு நன்றி சொல்லி விடைபெறகிறேன்
நன்றி வணக்கம்.

- **அழகு சுந்தரம்**

## 5 திரு. சா. மெய்யப்பன்

சமுதாயத்தில் விழிப்புணர்வு என்னும் தலைப்பில்
அமுதான தமிழ்க்கவிதை நமக்கு அளித்திட
வருகிறார் தமிழ் பயிற்றுவதில் **நல்லாசிரியர்**.
**விருதுபெற்ற கவிஞர்**, விழுத்தகு மெய்யப்பனார்.
புலவர் இராமசாமி அண்ணன் மருகர்
அன்னத்தின் கணவர், அருமைக் கவிஞர் இதோ!

### விழிப்புணர்வு வேண்டும் - சமுதாயத்தில்

தென்பொதிகைச் சாரலிலே பிறந்து
தென்பாண்டி நாட்டினிலே வளர்ந்து
தென்றல் போல் திக்கெட்டும் பரவி
தெவிட்டாத ஞானமுதாய் இனித்து
என்றென்றும் நிலைத்திருக்கும் தாயே!
தமிழே! உந்தன் தாள் பணிந்து வணங்குகின்றேன்.
சிறியேன் எந்தன் புன்தமிழைப் பொருத்தருளி
செந்தமிழில் கவிபாட கருணைமழை பொழிந்து
கடைக்கண் அருள்வாய் கமலத்தாயே!

காளத்தி வேடர் கண்ணப்பரின்
இயற்பெயரோ திண்ணப்பர்.
கடல்சூழ் சிங்கைவாழ் தமிழருக்குத்
கண்ணொப்பர் இவர். தமிழின் திசை தெரியா
இனத்தார்களுக்கோர் கலங்கரை விளக்கம்.
செம்மொழியாம் தமிழின் மென்மையைத்
திக்கெட்டும் தீம்பாகாய்த் தினமும்
தெவிட்டாமல் கற்பிப்பதில் திண்ணப்பர்.
ஐயா! உம் தலைமையில்
மெய்யப்பன் கவிபாடத்
தந்திடுவீர் நல்லாசி
வணங்குகிறேன் வாழ்த்திடுவீர்!

ஆதியும், அந்தமுமில்லா அருட்பெருஞ்சோதி சிவன்– அவன்
அறுவகைத் தத்துவத்தின் அருளால் முகிழ்த்த மகன் –
அவன்
கார்த்திகைப் பெண்கள் அறுவரின் ஆதரவில் வளர்ந்த
மகனவன்
ஆறுமுகன் சந்நிதியில் அமைந்திருக்கும் சபைதனிலே
அந்தி சாயும் பொழுதினிலே கவிஞர் அறுவர்
அறுவையின்றி அருமையாயப் பாடிடும் கவித்தேனை
அள்ளிப் பருகிட அமர்ந்திருக்கும் அவையோரே!

ஆச்சிமாரே! ஆன்றபெருஞ் சான்றோரே!
அள்ளித் தந்தேன் வணக்கங்கள் பெற்றிடுவீர்.
அருங்கவி பாட அனுமதி தந்திடுவீர்.
மாலைப் பொழுதின் மயக்கத்திலே
கவி நறவை மாந்தி உறக்கத்திலே
கனவு காணும் காளையர்களே!
காலமெல்லாம் கனவுலகில்
உறங்கிக் கழிக்கும் உம்நிலை மறந்து
கவிஞர் தம் பாட்டோசை கேட்டு
உறக்கம் நீங்கி விழித்திடுக! உமது
வாழ்க்கைப் பயணம் வெற்றிபெற
விழிப்புணர்வு கொண்டிடுக!
வீறு பெற்று எழுந்திடுக!
என்று நவில அழைத்திட்டார்
நகரத்தார் மன்றத்தார். அவருக்கு
நன்றி கூறிச் சமுதாய விழிப்புணர்வைச்
சற்றே நான் விளக்கிடுவேன்.

அறிந்தும் அறியா நிலை
புரிந்தும் புரியா நிலை
தெரிந்தும் தெரியா நிலை
இதுவே அவல நிலை
இன்றைய உலக நிலை
சமுதாய உறக்க நிலை
இந்நிலை அகன்றிடவே
இருள் நீங்கி ஒளி பெறவே
விழிப்புணர்வு கொள்ள வேண்டும்.
விரைந்து அதனைப் பெறவேண்டும்.

சமுதாயக் கட்டமைப்பில்
அடித்தளமாய் விளங்குவதோ
இளையர் கூட்டம் - ஆனால்
அவர்கள் சுற்றித் திரிவதோ குண்டர் கூட்டம்,
குணங்கெட்ட குண்டர்களின் வலையில் சிக்கி
குற்றங்கள் புரிகின்ற தொழிலை நீக்கி
குவலயம் போற்ற வாழ்ந்திட வேண்டும் என்ற
புரிந்துணர்வு பெற்றிட வேண்டும். இல்லையேல்
எதிர்காலச் சமுதாயம் கரையான் புற்றாய்ச்
செல்லரித்துப் போய்விடும்.
செல்லாக் காசாகி விடும்.

பிஞ்சு வயதிலேயே மயக்கும் மொழிபேசும்
வஞ்சியர் பின்திரியும் மடமைதனை மாய்த்து

விரிந்த இவ்வுலகினிலே
வியர்வைத் துளி சிந்தி நாளும்
விதவிதமாய்ச் சாதனைகள், பிறர்
வியக்கும் வண்ணம் சாதிப்பதே
சமுதாய விழிப்புணர்வு என்னும்
புரிந்துணர்வு வேண்டும் இன்றைய
இளையர் மனதில்.

வாழும் வழிதேடும் வாலிப வயதினிலே
வாதை தரும் போதைப் பொருள் சுகந்தனிலே
வாடிவதங்கித் திரியும் அவலநிலை
வேண்டாம் இனியென்று மயங்கித்
திரிந்த மனதையடக்கிப் பேதையவன்
மீண்டுவர விழிப்புணர்வு வேண்டும்.
அவ்வுணர்வு தனைத் தூண்டும்
கடமையினை இச்சமுதாயம் பெறவேண்டும்..

கண்மூடித் தனமாகத் திரிவதற்கு
கண்கட்டி வித்தையல்ல வாழ்க்கை
கள்ளம் கபடமற்ற சிறுவர்கள்
கல்விக்கண் பெற்று உயர்வதே மேன்மை - இது
கற்றுணந்தோர் கூறிடும் உண்மை என்னும்
உலகியற் தத்துவத்தை உணர்ந்து
கல்வி அறிவு பெறுவதுதான் வாழ்க்கை என்று
புரிந்து கொள்ள விழிப்புணர்வு வேண்டும்.

அன்னையர்தினம் தந்தையர் தினம்
அன்புள்ளம கொண்டோருக்குக் காதல் தினம்
அய்யா அப்பத்தாளுக்குக்கொரு முதியோர் தினம் என்று
அடுக்கடுக்காய்ப் பல தினங்கள் கொண்டாட
அகிலமெல்லாம் அன்புக்கு ஏற்பட்ட பஞ்சந்தான்
காரணமென்ற கசப்புணர்வு நீங்கி, நம்மைக்
காலமெல்லாம் காதது நிற்கும், கட்டுக் குலையாத
குடும்ப உறவுகள் அவசியம், எந்நாளும் வேண்டும்
குடும்பதினம் என்னும் புரிந்துணர்வு இருந்திடடால்
குத்து வெட்டுக் கொலை இல்லை.
பாகப்பிரிவினை, பங்காளிச் சண்டை இல்லை.
கோர்ட்டு கேசு வாய்தா இல்லை
மாமியார் மருமகள் வாய்ச்சவுடால் இல்லை.
அன்பு கொண்ட நெஞ்சில் அதை தவழும் - என்ற
விழிப்புணர்வு வேண்டும் பரந்த இவ்வுலகில்.

ஒரு சொல், ஒரு இல், ஒரு வில் என்ற

ஒப்பற்ற தத்துவத்தைத் தரணிக்கு எடுத்துரைத்த
தசரதன் மகன் பிறந்த இம்மண்ணில்
காலையில் ஒரு சட்டை, மாலையில் ஒரு சட்டை
கலர்கலராய் அணிந்து கசக்கி எறிந்து விட்டு
கவலையற்றுத் திரியும் காளையர் கூட்டம் போல
காதல் கனவில் கட்டுண்ட பலர் இன்று
காலையில் திருமணம் மாலையில் மணவிலக்குக்
கோரிப் பெறுகின்ற கோமாளித் தனத்தினைக்
கண்டும் காணாதிருக்கும் இச்சமுதாயப் போக்கினை
சுட்டுப் பொசுக்கிடச் சூளுரைக்க வேண்டும்.

மணவிலக்குப் பெறல் மறத்தமிழர் பண்பாடல்ல
மாசற்ற அன்பே மாபெரும் உலகில்
மாந்தர் குலத்தை மேன்மையுறச் செய்யும் என்னும்
வேதாந்தக் கருத்தினை விருப்பு வெறுப்பு இன்றி
வேதம் போல் கற்றிட்டால் பேதம் ஏதுமின்றி
இன்பத்திலும் துன்பத்திலும் உயர்வு தாழ்வினிலும்
இணை கோடாய்ச் செல்வதுவே
இல்வாழ்க்கைப் படகு வெற்றித் திசை நோக்கி
விரைந்து செல்லும் விந்தை என்ற
வித்தைதனைப் புரிந்து கொண்டால்
மணவிலக்கு மன்றங்கள்
மறைந்தொழியும் விரைவினில்
முன்னோர் பின்னே வந்த
மரபுடைய நம் சமுதாயத்தில்
வேலியே பயிரை அழிக்கும்
மணவிலக்கு வேண்டாம்
என்னும் விழிப்புணர்வு ஏற்பட்டால்
காலந்தோறும் கட்டிக் காத்து வந்த
தமிழ்ப் பண்பாட்டு நெறி காக்கப்படும்.

மணமுடிக்கக் காத்திருக்கும்
மங்கை மலர்த் தோட்டத்தில்
மகரந்தச் சேர்க்கை ஏற்படாமல்
மணம்பரப்பி மனம் மகிழாமல்
முதிர் கன்னியாய் வாடி விழ
முதற் காரணமாய் இருக்கின்ற
சீட்டை எழுதி சீர் கேட்கும்
சிறுமைதனை மாற்ற வேண்டும்.
வரதட்சணைக் கொடுமைதனை ஒழிக்க வேண்டும்.
சிறுவாடு சேர்க்கும் பெண்ணினம்
சீர்பெறும் வழி தேடுதற்கு இச்
சமுதாயம் சீக்கிரமே

விழிப்புணர்வு கொள்ள வேண்டும்.

யானைக்கு மதம் பிடித்தால் அது வியாதியாகும்
மனிதனுக்கு மதம் பிடித்தாலோ அது பீதியாகும்.
மரணத்தை ஏற்படுத்தும் மனித வெடிகுண்டாகும்.
உலகமயமாதல் என்னும் ஒற்றுமை நிலைகுலைந்து
ஒப்பாரி மயமாக மாறுகின்ற ரசவாதத் தன்மையை
ரசகுல்லாவாக இனிக்கின்ற மதவாதப் பேய்தனை
ஒற்றுமை வேப்பிலை கொண்டு ஓட ஓட விரட்ட வேண்டும்.

இதற்கு,
எல்லோரும ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம் என்ற
எல்லையில்லா சமரச சன்மார்க்க உணர்வு வேண்டும்.
ஓடுகின்ற நதிகள் பலவாயினும் அவை சென்று
கலக்கின்ற இடம் கடலொன்றே அன்றோ!
கும்பிடும் சாமிகள் பலவாயினும்
வழிபாட்டு முறைகள் வேறாயினும்
அவையெல்லாம் நம்மை இட்டுச் செல்லும்
மார்க்கம் ஒன்றே- அதுவே இறைவன் திருவடி
என்னும் பேரொளி நம் உள்ளத்தில் தோன்ற
நாடு நலம் பெற, மனித இனம் உயர்வு பெற
இன, சமய நல்லிணக்கம் நாடவேண்டும் என்னும்
விழிப்புணர்வு சமுதாயத்தில் மலர வேண்டும்.

தம்மை நம்பிடாமல் தான் கண்டறியாத
தம் கண்ணூக்குத் தெரியாத கிரகங்களின்
தசாபுத்தி நிலையை நம்பி திக்குத் தெரியாது
திசைகெட்டு அலைகின்ற நிலை மாறவேண்டும்.
உழைப்பை நம்பி உதிரத்தைச் சிந்தி
தும்பிக்கை போன்ற நம்பிக்கை கரம் கொண்டு
ஊர்மெச்ச வாழ்ந்திடும் ஊக்கம் பெறவேண்டும். - இதைவிட்டு,

குறுக்கு வழிதன்னில் குபேரனாக வழிதேட
கிறுக்கர் சிலக் கூறும் கட்டுக்கதைதனை
கிழித்தெறிந்து, உழைத்துப் பெயர் பெற்றோர்
உண்மைக் கதைதனை உணர்ந்து, உழைப்பில்
நம்பிக்கை வெறவேண்டும் வாழ்வு வளம்பெற.

நம் சிந்தனையைச் சிறையிலிட்டு,
பகுத்தறிவைப் பகைவனாக்கி,
நண்பர்களைத் துரோகியாக்கி - நம்மை
நம்பி வந்த நங்கையையும் நட்டாற்றில் விட்டுவிட்டுப்

பெற்ற பிள்ளையையும் பலிகொடுக்கும நம்
பிழைப்பைக் கெடுக்கும் பாதகச்செயல் புரியும்
மூடநம்பிக்கைதனை மூட்டும் கனலெடுத்து
மூவேழு தலைமுறைக்கும் முளைவிட முடியாமல்
சுட்டெரிக்கும் ஆற்றல் பெற
மூச்சடங்கி மூலையிலே முடங்கிக் கிடக்கும்,
சமுதாயம் உறக்கம் நீங்கித் துயிலெழ
விழிப்புணர்வு கொள்ள வேண்டும்,
விரைந்து நாம் அதைச்செய்ய வேண்டும்.

ஆன்மீக வழிபாட்டில் புரையோடிப் போயிருக்கும்
அவலநிலை நீக்கி, அன்பே வடிவாக
அமர்ந்திருக்கும் போதிமரப் புத்தன் போல்
ஆசைதனை அடக்கி, உலகியல் ஆசைதனை அடக்கி
அருள்புரியும் அருளாளர் தமை வணங்கும்
தூயநெறி வேண்டும், துன்மார்க்க வழிநின்று
துன்பப்படும் பக்தர் மனதில் ஆசைத் தீயை
ஆகுதி செய்து அந்நெருப்பில் குளிர்காயும்
காவி உடைக்குள் காமுகராய் உலாவரும்
பணப்பித்தும், புகழ்பித்தும் கொண்ட
பகல்வேஷப் பொய்யர்களைப் புனிதர்கள் என்று
கனகாபிஷேகம் செய்து வணங்கித் தொழுதிடும் குருட்டு
வழக்கத்தை ஒழித்திட சமுதாயத்தின்
இருட்டு நிலை நீங்கிட விழிப்புணர்வு வேண்டும்.
பழமரம் தேடும் பறவை போல
மரத்திற்கு மரம் தாவும் குரங்கு போல
நாடு விட்டு நாடு வந்து நல்ல பல தொழில் செய்து
பணம் ஒன்றே குறிக்கோளாய் - மக்கட்
பண்பாடு மறந்து நாளும்
பரபரப்பாய் வாழ்கின்ற
படித்தவர்கள் - தாம்
பிறந்த மண்ணின் பெருமை பேசும் நிலை மாறி
பக்குவமாய் நம்மை வளர்த்த சிங்கை மண்ணை
பாசத்தோடு பார்க்கின்ற நேசம் வேண்டும்.
வேடந்தாங்கல் பறவை போல
வேளைக்கோர் இடந்தேடாது
வேலை தந்த இடத்தினையே
நிரந்தரமாக்கி வாழ்கின்ற
நிலைபெற வேண்டும்.
வேரினைத் தாங்கும் விழுதினைப் போல
(பல்) வேற்றினத்தார் வாழும் இம்மண்ணின்
வெற்றியைத் தாங்கும் தூண்களாக

வந்தவர்கள் மாற வேண்டும்.

சாதி சமய வர்க்க பேதமற்ற
சமதர்ம சமுதாயம் வாய்ப்பதற்கும்
வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
வாடிய வள்ளலாரின்
ஆன்மநேய ஒருமைப்பாடு
அகிலமெல்லாம் நிலை பெறுவதற்கும்
அறிவியல் ஆக்கத்திற்கே அழிவிற்கு இல்லை என்னும்
ஒப்பற்ற வாசகம் உலகமெல்லாம்
ஓங்கி ஒலிப்பதற்கும் ஒன்றிணைந்து
நாமெல்லாம் தாங்குகின்ற
சமுதாயம் துயில் நீங்கி விழிப்புற்று
துடிப்புடனே செயல்பட
வீறுகொண்டு எழுந்திடுவோம்.
விழிப்புடனே காத்திடுவோம் – என்று கூறி
சமுதாய விழிப்புணர்வைப்
பெரியமனது பண்ணித்
தூங்காமல் செவிசாய்த்துக்
கேட்டிட்ட அவையோருக்குக்
குறையாமல் நன்றிதனை விரைவாகக்
கூறிச் சென்றிடுவேன்.
நன்றி, வணக்கம்!

– **சா. மெய்யப்பன்**

## 6) திரு லெ. சக்திகுமார்

சக்திகுமார். இல்லை, இல்லை பக்திகுமார்.
காவடி தூக்கி முருகன் சேவடி நினைத்துப்
பாவடித்துப் பரவசத்தால் பாடும் பக்திகுமார்.
நகரத்தார் குலம் தழைக்க விழிப்புணர்வு
பகர வருகிறார் பாங்குடனே!

## விழிப்புணர்வு வேண்டும் – குலத்தில்

### குலம் பற்றிய விழிப்புணர்வின் அவசியம்

ஆழிப்பேரலை போல் சீறும்
    தொழில் நுட்பங்களின் தாக்கம்
அனைவரின் வாழ்க்கையையும்
    வேகமாய் சுழற்றிப் போடும்.
(அவ்) வேகம் தணிக்க

விவேகம் அவசியம்
விவேகம் என்பது
அறிவு சார்ந்தது.
அறிவு என்பது
தகவல் சார்ந்தது.
அறிவுசார் உலகில்
அனைத்தைப் பற்றியும் அறிவது அவசியம்.
அறிந்ததைக் கொண்டு
தெரிந்ததைத் தெளிவுறச் செய்தால்
அகண்ட உலகில்
வெற்றி நிச்சயம்.
அறிக அறிக
அனைத்தையும் அறிக.
அனைத்தையும் அறிந்தால்
ஏற்றமே தெரிக.

குலம் என்றால் குடி
குலம் என்றால் மேன்மை
குலம் என்றால் அழகு.
குலம் என்றால் கோயில்
குலம் என்பது
கலாசாரத்தின் அடையாளம்.
கலாச்சாரத்தைக் காலச்சக்கரம்
கசக்கிப் போட்டால்
காய்ந்த சருகாய்
நாம் கருகிப் போவோம்.

மயிலின் அழகு, குயிலின் இனிமை,
கலைகளின் நயங்கள், கல்வியின் அவசியம்,
உழைப்பின் உயர்வு, பண்பின் சிறப்பு,
அன்னையின் பாசம், தந்தையின் நேசம்,
அன்பின் மகத்துவம், குடியின் மேன்மை,
போற்றி நடப்பதே மனிதத்தின் சிறப்பு.

பிறந்த மண்ணும் பிறந்த குடியும்
பிறப்பால் நமக்கு இயற்கை தந்தது
இயற்கை தந்ததை இனிதே போற்றி
இவ்வுலக வாழ்க்கையில் மேன்மை அடைவதே
சான்றோர் சொன்ன நன்னெறியாகும்.

தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்
எல்லாம் தொடுத்த போரில்
நமது குல கலாச்சாரம் (எல்லாம்)
கதறிக் கொண்டிருக்கின்றன

கதறும் கலாசாரத்தை காப்பாற்ற
விழித்து எழுங்கள் - நீங்கள்
சிலிர்த்து எழுங்கள்
என்பதே என் வேண்டுகோள்.

பழம்பெருமை பேசிப் பாழாகச் சொல்லவில்லை
பழம்பெருமைகளைத் தொகுத்தெடுத்து
புதுமை புகுத்தி படிப்படியாய் உயரச் சொல்கிறேன்.

இனவெறி பிடித்து அலையச் சொல்லவில்லை
இனத்தின் மேன்மை அறிந்து
இவ்யுகத்தில் புகழ்பெறச் சொல்கிறேன்.

பொதுவாய்ச் சொல்லிப் பொழுதைக் கழிக்காமல்,
மெதுவாய் நம் நகரத்தார் மேன்மை பற்றி
நாம் அனைவருமே அறிந்து கொள்ளத்
தானைத் தமிழால் தட்டியெழுப்ப விழைகின்றேன்.

## நகரத்தார் பெருமை

என்னருமை நகரத்தார் எதிலும் வல்லார்
எடுத்த பணி அத்தனையும் சிறப்பாய் செய்வர்
எத்திசையும் செல்கின்ற துணிவு மிக்கார்
எண்ணில்லா செல்வத்தை முயன்று சேர்த்தார்.
என்.கே.எஃப் என்றாலும், என்.கே.சி என்றாலும்
எண்ணி எண்ணிச் செலவழித்து ஏற்றம் பெற்றார்.

எத்திசையும் காக்கின்ற முருகவேளை
எப்பொழுதும் வணங்கி வருகின்ற நகரத்தார்கள்
எங்கெங்கும் கந்தனுக்குக் கோயில் வைத்தார்
அங்கெல்லாம் அறம் தழைக்க அள்ளித் தந்தார்.
சைவத்திருமுறைகள் செழிக்கச் செய்தார்.
செந்தமிழை நாடெங்கும் பரவச் செய்தார்.
வட்டார நாடெல்லாம் செழிக்கச் செய்தார்.
வங்கித் தொழிலுக்கு வழியைச் சொன்னார்.
வண்ணக்கலை வளர்க்க வாரித்தந்தார்.
வளமான வாழ்க்கையினை அமைத்து தந்தார்.

வலியபெரும் அரசுகளும்,
வனப்பான வணிகர்களும்
(தன) வைசியர்கள் நாம்கொடுத்த
செல்வத்தால் அன்றோ செழித்தார்கள்.
அறுபத்தி மூவரிலே
ஐவர் நம்மவர்கள்
ஐம்பெரும் காப்பியத்துள் இரண்டு

நம்மவரைப் போற்றி நிற்கும்
பட்டினத்தடிகள் போன்ற
நல்லோர் பிறந்த குடி.

பாடுவார் முத்தப்பர்
பார் புகழும் கவியரசர்
பல்கலைக்கழகம் தந்த
ராஜா சர் அண்ணாமலையார்
தமிழ்தழைக்க சங்கம் கண்ட
ராஜா சர் முத்தையாவும்
தமிழகத்தின் வரலாற்றிலே
தன்னிகரில்லா எம்.ஏ.சிடி,
பாரதத்தின் நிதியாளும்
பண்பான சிதம்பரமும்.
கலைத்தந்தை கருமுத்து தியாகராசர்
கல்விக்கே தனைத்தந்த அழகப்பர்
கலைத்துறையில் தனித்தபெரும் ஏ.வி.எம்.
கணப்பெரிய நிறுவனங்கள் நிறுவிவைத்த ஏ.எம்.எம்.

செய்கோனும், ரங்கோனும் செழிப்பதற்கே
சொந்தங்கள் விட்டுவந்த பெரியோரும்
மலேசியா போற்றுகின்ற டத்தோ பலபேரும்
சிங்கைநகர் சீராட்ட வாழ்ந்துவரும் இவ்வவையோரும்
நகரத்தார் நற்குடியின் மேன்மைக்குச் சான்றாவர்.

நாட்டோரும், நல்லோரும்
போற்றிப் புகழும் குடி
அளவில் சிறிய குலம்தான் என்றாலும்,
அளப்பரிய திருப்பணிகள்
அளவில்லா தர்மங்கள்
அன்போடு அன்றாடம் செய்துவரும் ஆன்றகுடி

செட்டிநாட்டு சேலைகளும்
கட்டிவைத்த கோட்டைகளும்
கழுத்துரு, கண்டசரம்,
சிலேட்டு விளக்குகளும்
நகரத்தார் குலப்பெண்கள்
அணிந்து வரும் நகையழகும்
அள்ளி வைத்து காப்பாற்றி
நமக்களித்த சாமானும்
வட்டியிலே உணவருந்தி
வளமாக வாழ்ந்த பண்பும்
வாழ்க்கையைத் துறந்தேனும்
மானத்தைக் காத்த பண்பும்

வகை வகையாய்ப் பலகாரம்
பலநூறு செய்து வைத்து
வந்தாரை உபசரிக்கும்
விருந்தோம்பல் சிறப்பும்,
இங்கே நகரத்தார் பண்பாக
நவிலுதல் சிறப்பாகும்..

தேன்குழலும், மாவுருண்டை சீப்புச்சீடை
தெவிட்டாத ஆடிக்கூழ் கவுனிஅரிசி
மணக்கின்ற மனகோலம் சீடைக்காயும்
தித்திக்கும் பால்கொழுக்கட்டை பால்பணியாரம்
பூப்பூவாய் இட்டலியும் வெள்ளைப் பணியாரமும்,
செட்டிநாட்டுப் பலகாரப் பட்டியலில் ஓர் துளிதான்

ஓர்குடியாய் ஓர் இனமாய்
ஓங்கித் தழைத்த குலம்
வேறு இனத்திடம் கைகட்டி
சேவகமே செய்யா ஒரே குலம்
தனிமனிதன் தருமங்கள்
செய்வதில் வியப்பில்லை.
தனித்த பெரும் ஓர்குலமே
இன்றளவும் வடிவேலனுக்கு
வாரித் தருவதுதான்
விந்தைமிகு செயலாகும்.
வரலாறு படைத்து நிற்கும்
நகரத்தார் வரலாற்றை
நானிலமும் அறியுமாறு
நவிலாது போனது தான்.
நம்மவர்கள் பெருமையினை
நாமே அறியாமல்
வாழ்ந்து வரும் இந்த நிலை.

பாரம்பரியத்தை பறைசாற்றத்
தயங்கி நின்றதனால்
பாரத நாட்டிலேயே பரதேசிகள் என்று
புல்லர்கள் பட்டம் இட்டார்.

தனிப்பெரும் குடியான் நகரத்தார்கள் - ஒரு
தலைமுறையில் தணிந்து பணிந்துபோனதினால்
வணிககுலம் வற்றிய குலமானது
செட்டியார்களைத் தவிர மற்ற அனைவருமே
செட்டிநாட்டை மூலதனமாக்கி
நமது கலாசாரத்தை காசாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.
செட்டிநாட்டுக் கோட்டைகளை சீர் அமைக்கத் தவறியதால்

நம் இல்ல வியப்புமிகு பர்மாத் தூண்கள் எல்லாம்
வி.ஜி.பி கடற்கரையில் விநோதமாய் நிற்கின்றன.
சிக்கனத்திற்கும், செல்வாக்கிற்கும்
பெயர் போன செட்டிநாடு - இன்று
செட்டிநாட்டு சிக்கனுக்கும்,
செட்டிநாட்டு மிலிட்டரி உணவுவிடுதிகளுக்கும்
பேசப்படும் அவலநிலை
செட்டியார்கள் நலிந்தார்கள் மெலிந்தார்கள்
செட்டிநாட்டை விட்டு நகர்ந்தார்கள் என்று
செய்தித்தாள்கள் சரித்திரம் எழுதுகின்றன.
செட்டிநாட்டு சரித்திரம்
வெற்று சரித்திரமாய்
வேற்று மனிதர்களால்
எழுதப்படுவதற்கு முன்னால் நாம்
விழித்து எழுவோம்
நகரத்தார் ஊர்களையும்
செட்டிநாட்டுச் செழிப்பையும்
ஊரார் விற்று உறங்கும் முன்னே
நம்குடி வளர நாம் துடித்து எழுவோம்.
நமது நற்குடிப் பெருமையினை
நாளெல்லாம் பேணிக்காத்து
நமது சந்ததிகள் தழைத்திடவே
சான்றாய் பகர்வோம்.

## வாருங்கள் வளம் பெறுவோம்

நகரத்தார் பெருமைகளை மறந்திடாமல்
நல்லபல பழக்கங்களைத் தொடர்ந்திடுவோம்
நாம் உயரும் வழிவகையை தெரிந்து கொண்டு
நல்லதொரு பாதையினை வகுத்திடுவோம்.

உயர்கின்ற நகரத்தார் உழைப்பைக் கண்டு
உள்ளமதில் கள்ளமில்லா உவகையோடு - அவரைப்போல்
உயர்வடைய உற்றவழி நாமும் காண்போம்.

உயர்ந்தவராய் நாமிருந்தால் மகிழ்ச்சியோடு
உடன்பிறந்தோர், சுற்றத்தார் நம்மினத்தில் உள்ளோர்
உயர்வடைய ஒருவழியை நாமே காண்போம்.
தலைமுறையில் ஏற்பட்ட இடைவெளியைத்
தலையாய பணியாக துடைத்தெறிவோம்.
ஓர்குலமாய் ஓர்இனமாய் உயர்ந்த அந்த
பாட்டையாக்கள் போல் நாமும் உயர்ந்து நிற்போம்
கைபழக அழைத்துப்போய் கரையேற்றிவிட்ட அந்த
கனிவான குணங்களை நாம் மீண்டும் தொடர்வோம்.

அயல்நாட்டில் அய்யாக்கள் பணம் சேர்க்க
அரண்மனையாம் நம் இல்ல கோட்டைகளை நிர்வகித்த
அப்பத்தா ஆயாக்கள் போல் நம்
ஆச்சிமார் அத்தனைபேரும்
ஆன்றதொரு நிர்வாகிகளாய் மிளிரக் காண்போம்.

ஊரார் கதையெல்லாம் பேசி பேசி
உள்ளுக்குள் பகைமையினை வளர்த்திடாமல்
உலகெல்லாம் மெச்சும்வகை ஒன்றுபட்டு
உதவுகின்ற தன்மையினை நம்முள் வளர்ப்போம்.

தன்னிறைவு பெற்ற இனம் என்ற பேரை
தகைமையுடன் பெறும் நாளை நோக்கி வெல்வோம்.
வகை வகையாய் வணிகங்கள் பலவும் செய்து
தொகை தொகையாய் அநேக செல்வம் சேர்த்த
வணிகக்குடி என்னும் பெருமையினை கட்டி காக்க
தொழில் முனைவர்களை உருவாக்க உறுதிகொள்வோம்.

உயர்குடியில் பிறந்த நம் மரபை காத்து
உயர்வான குடியாக மேலும் ஓங்க
பழமைமிகு பண்பாட்டில் புதுமை புகுத்தி
பாரெல்லாம் புகழும்வகை ஒன்றாய் வாழ்வோம்.

கல்வியிலே சிறந்துவரும் இளைஞர்மாரே
கரைபுரளும் செல்வத்தை ஈட்டிச் சேர்க்க
காலமெல்லாம் உம் பெயரை கட்டிக்காக்கும்
கணப்பெரிய நிறுவனங்கள் அமைக்க வேண்டும்.

நாணயமாய் நல்ல பலவணிகம் செய்து
நன்னிலத்தே நம்குடியும் சிறந்து ஓங்க
வணிககுல பெரியோரே விழித்து எழுந்து
வளர்ச்சி தரும் வழியினை இன்றே காண்க

வழிவழியாய் நாமெல்லாம் வணங்குகின்ற
வடிவேலன் முருகனவன் துணையும் கொண்டு
வளர்ச்சி என்ற மந்திரத்தை மனதில் கொண்டு
தளர்ச்சியில்லாப் பாதையிலே ஒன்றாய் செல்வோம்.

உலகெல்லாம் வாழ்கின்ற நம்மினத்தார் ஒன்றுபட்டு
உயர்குடியாய் செழித்தோங்கி தழைத்து வாழ
மேற்சொன்ன கனவெல்லாம் நிஜமாய் நிலைக்க
சிங்கைநகர் தண்டபாணி
சீர் அடியை வணங்கி வாழ்த்தி
சீர் வளரப் பேர் வளர சிறப்போடு வாழுகின்ற
சிங்கைநகர் நகரத்தார் நாம்

சங்கம் காண்போம்.
நன்றி!! வணக்கம்!

**- திரு லெ. சக்திகுமார்**

பட்டா

நிலையான பூமிக்கு
நிலையில்லாத மனிதன் - தன் பெயரை
வைத்துக் கொள்ளும் சாஸனம் -
யாரோ

தொலைக்காட்சி

கூரையிலே வேர்விட்டுக்
கூடத்திலே பூப்பூக்கும் சாதனம்.

- யாரோ

# இலக்கியவிழா அழைப்பிதழ்

**ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில் திருமண மண்டபத்தில்**
**இனிய தமிழ் முழக்கம்!**

தமிழ் ஆர்வலர்களுக்கு அரிய விருந்து. நகரத்தார்களின் தமிழ்ப் புலமை
காண அனைவரும் வாரீர்!

**நாள் - 03-09-05, சனிக்கிழமை**
**நேரம்- மாலை 05.00 மணி.**

## 1. கவிதைப் பூங்கா

**பார்வையாளர்கள்** தாங்கள் எழுதிய, படித்து ரசித்த கவிதைகளை வாசிக்கப் பங்கெடுக்கும் நிகழ்ச்சி.

## 2. கவியரங்கம்

தலைமை: முனைவர் **திரு சுப. திண்ணப்பன்** அவர்கள்.

***தலைப்பு - விழிப்புணர்வு வேண்டும்!***

| | | |
|---|---|---|
| ***குழந்தை வளர்ப்பில்*** | திரு | க. வெங்கடாசலம் |
| ***பொருளாதாரத்தில்*** | திரு | அழகு சுந்தரம். |
| ***சமுதாயத்தில்*** | திரு | சா. மெய்யப்பன் |
| ***பருவத்தில்*** | திரு | சித. அருணாசலம். |
| ***உனக்குள்*** | திரு | ராம. வைரவன். |
| ***குலத்தில்*** | திரு | லெ. சக்தி குமார். |

## 3. பட்டி மன்றம்.

நடுவர் : முனைவர் **திரு க. ஐங்கரன்** அவர்கள்.

***தலைப்பு - இன்றைய சூழலில் குடும்ப முன்னேற்றத்திற்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பது,***

| ஆண்களே! | பெண்களே! |
|---|---|
| **திரு சுப. அருணாசலம்** (அணித் தலைவர்) | **திரு. சபா முத்து நடராஜன்** (அணித் தலைவர்) |
| திரு வெ. இராகவன் | திரு கண. மாணிக்கம் |
| செல்வி அலமு வெங்கடாசலம் | செல்வன் அருணாசலம் கண்ணன் |

குறிப்பு: 1. நிகழ்ச்சியின் இறுதியில் இரவு உணவு வழங்கப் படும்..

2.அன்றைய தினம் நகரத்தார் கையேடு வெளியிடவும் திட்டமிடப் பட்டுள்ளது.